மேழிச்செல்வம்

மாத இதழ்



சோபகிருது ௵ ஆனி ௴

MADRAS RECORD OFFICE
12 JUL 1963
P 870
MADRAS

பசுந்தாள் உரமிட்டு
பயிர் வளம் பெருக்குவோம்

குறைந்த நாட்களில் நிறைந்த பசுந்தாள் உரம் கொடுக்கும் "சணப்பு"

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

1963-ம் ௵ ஜூன்-ஜூலை ௴

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

ஜூலை மாதத்திய கிராம நிகழ்ச்சிகள்

திங்கள் (15—7—63)

ஊர் சாவடி.
விஞ்ஞான கூடம் : காகிதத்தின் கதை.
மாப்பிள்ளை உத்தியோகம் : நாடகம்.
(என். ராகவன் எழுதியது)

செவ்வாய் (16—7—63)

ஊர் சாவடி.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும் பதிலும்.
2. கடலை சாகுபடி : உரையாடல்.

புதன் (17—7—63)

ஊர் சாவடி.
குஷ்ட ரோகயைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்ன ?
சரித்திரக் கதைகள் : சங்கத்தின் கதை.
வரும்படி வரதசாமி : நாடகம்.
(எஸ். பூமிநாதன் எழுதியது.)

வியாழன் (18—7—63)

ஊர் சாவடி.
திருக்குறள் விளக்கம்.
நமது திட்டம்.
கிராமக் கைத்தொழிலும் பஞ்சாயத்து ராஜ்யமும்.

வெள்ளி (19—7—63)

ஊர் சாவடி.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும் பதிலும்.
2. கிராம தொண்டர் அணியின் நடைமுறை.

சனி (20—7—63)

ஊர் சாவடி.
ஆப்பிரிக்க குதிரை நோய்.
நம் மாதர் மன்றம்—
1. ஆப்பிரிக்கார அங்காடி.
2. சதயநெறி : தொடர் சித்திரம்.

ஞாயிறு (21—7—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
பேரிக்காய் மரம் வளர்த்தல்.
கிராமச் சாவடியில் வழக்கு விசாரணை.

திங்கள் (22—7—63)

ஊர் சாவடி.
விஞ்ஞானகூடம் : மின்சாரத்தின் உபயோகம்.
அப்பா வரட்டும் : நாடகம்.
(எஸ். எம். ஏ. காதர் எழுதியது)

செவ்வாய் (23—7—63)

ஊர் சாவடி.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும் பதிலும்.
2. உணவும் வளர்ச்சியும்.

புதன் (24—7—63)

ஊர் சாவடி.
ரத்ததானம்.
சரித்திரக் கதைகள் : அசோகன் துறவு.
திருவிழா கோடை : சித்திரம்.
(என். ராகவன் எழுதியது.)

வியாழன் (25—7—63)

ஊர் சாவடி.
திருக்குறள் விளக்கம்.
நமது சாதனை : சம்பாஷணை.

வெள்ளி (26—7—63)

ஊர் சாவடி.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும் பதிலும்.
2. அவசர நிலைமையும் நமது கடமையும் : தேசிய சேமிப்பு.

சனி (27—7—63)

ஊர் சாவடி.
வெள்ளாடுகள் நேர்ந்தெடுத்தலும் வளர்த்தலும்.
நம் மாதர் மனறம்—
1. குடும்பக் கட்டுப்பாடு.
2. சத்யநெறி.

ஞாயிறு (28—7—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
கிராம முன்னேற்றம்.
லாவணி.

திங்கள் (29—7—63)

ஊர் சாவடி.
விஞ்ஞான கூடம் : நமக்கு தந்தி எப்படி கிடைத்தது ?
வளரும் தமிழகம்.

செவ்வாய் (30—7—63)

ஊர் சாவடி.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேளவியும் பதிலும்.
2. கிராம பால் பண்ணை.

புதன் (31—7—63)

ஊர் சாவடி.
ஈக்கள் ஒழிப்புகள்.
செய்தித்தாள்.
பாட்டுக்கச்சேரி : சித்திரம்.

உள்ளுறை

	பக்கம்
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	2
தஞ்சை தீவிர சாகுபடி நடைமுறை திட்டம்	5
விவசாயத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்	10
நல்ல பண்ணையை தேர்ந்தெடுங்கள்	12
எலி!—ஒரு தீராத தொல்லை	13
குறுகிய கால கேழ்வரகு—இ.சி. 4728	14
நெல்லுக்கு இறைத்த நீர்	16
பயிர்ப் பாதுகாப்பில் முன்னெச்சரிக்கை	17
நெற்பயிரின் இலையைத் தாக்கும் சில முக்கிய புழுக்களும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும்.	20
விவசாயிகளுக்கு வேண்டுகோள்	22
உங்கள் விளைபொருள்களுக்கு நல்ல விலை பெற வேண்டுமா ?	23
ஐம்பதே நாட்களில் 17,000 ராத்தல் தாளுரம்	24
மானாமதுரை யூனியன்—மாங்குளம் பஞ்சாயத்தில் முந்திரி சாகுபடி	26
விவசாயச் செய்திக் கதிர்	27
1963-ம் ஆண்டு எப்ரல் மாதக் காலநிலை அறிக்கை	29
ஆடி—ஆவணி மாத விவசாயக் குறிப்புகள்	30
மேடைப் பாத்தி நாற்றங்காலின் மேன்மைகள்	31

விளம்பரங்கள் :

வால்டாஸ்	4
வாட்டர் டிவைனர்	12
ஜான்ஸ்டன்	15
எ. வி. தாமஸ் அண்டு கோ.	19
ராமன்ஸ் இஞ்ஜினீயரிங்	22
பொட்டாஷ்	25

வெற்றிக்கு வழி அமோக உற்பத்தி, அதிக சேமிப்பு

மாடுகளினால் இழுக்கப்படும் வால்டாஸின் மேன்மையாக்கப்பட்ட சேற்றுக்கலப்பையினால் நிலத்தை நன்றாகவும் சீக்கிரமாகவும் உழலாம்



இந்தியாவில் விவசாயத்திற்குத் தேவையான கருவிகளை தயார் செய்வதில் முன்னணியிலிருக்கும் 'வால்டாஸ் லிமிடெட்' கம்பெனியாரால் தயாரிக்கப்படுகின்ற, மாடுகளினால் இழுப்பதற்கான இந்த சேற்றுக் கலப்பை நெல் சாகுபடி செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இந்த சேற்றுக்கலப்பை மண்ணையும், தண்ணீரையும் நன்றாகக் கலந்து ,உடனே நாற்றை நடுவதற்கேற்ப நிலத்தை சீராக்குகிறது. இது நிலத்திலுள்ள, புற்பூண்டுகளையும் தழை உரங்களையும் மண்ணுடன் நன்றாகப் புரட்டி மண்ணையும் உரச் சத்துக்களையும் கலக்கும்படி செய்கிறது. சிறு வயல்களில் ஓரங்களையும் கூட நன்கு உழக்கூடியது.

உலோக பேரிங்குகளுடன் கூடிய புதிய சேற்றுக் கலப்பை இரண்டு சைஸ்களில் கிடைக்கின்றன. ஒன்று—இரண்டு குழித்தட்டுகளைக் (55 சென்டி மீட்டர் அகலத்திற்கு உழக்கூடியது) கொண்டது; மற்றொன்று, மூன்று குழித்தட்டுகளைக் (86 சென்டி மீட்டர் அகலத்திற்கு உழக்கூடியது) கொண்டது. மூன்று குழித்தட்டுகள் கொண்ட சேற்றுக்கலப்பை உழும்பொழுது, உழுபவர் சௌகர்யமாக உட்கார்ந்து ஓட்டுவதற்காக பிரத்தியேகமான ஆசனம் உள்ளது.

முக்கிய அம்சங்கள்:

- உற்பத்தி அளவை அதிகரிக்கலாம்.
- சுலபமாக திறமையுடன் உபயோகப்படுத்தலாம்.
- சிறிய நிலங்களையும் சிக்கனமாக உழலாம்.
- உழும்பொழுது பிளேடுகள் தானாகவே சுத்தம் செய்து கொள்கின்றன.
- மண் கட்டிகளை நன்றாக உடைத்து மெல்லியதாக்குவதுடன் தழை உரங்களையும் மண்ணுடன் நன்கு சேரும்படி செய்கிறது

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:

வால்டாஸ் லிமிடெட்,
அக்ரிகல்சரல் மெஷினரி டிவிஷன்:
கிஞ்ச்போக்லி ரோடு, பம்பாய்-33

கல்கத்தா . புது டில்லி . மதராஸ் . பங்களூர் . கொச்சி . அஹமதாபாத்
செகந்திராபாத் . நாக்பூர் . பாட்னா . போபால் .

VOLTAS

VOL. 402 R. TAM EVEREST

மலர் 20 | சோபகிருது௵ ஆனி௴—1963—ஜூன்-ஜூலை | இதழ் 6

தஞ்சை தீவிர சாகுபடி நடைமுறை திட்டம்

[டி. எஸ். பிரான்ஸிஸ், B.Sc., Ag., M.S. (U.S.A.), வேளாண்மைத்துறை கூட்டு நெறியாளர்,
தீவிர சாகுபடி திட்டம், தஞ்சை.]

முன்னுரை.—தீவிர விவசாய மாவட்ட நடைமுறைத் திட்டம் என்பது விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கான ஓர் ஒருங்கிணைந்த ஆற்றலுள்ள திட்டமாகும் மேலும் இத்திட்டம், தற்போது உள்ள திட்டத்தை கூடுதலான பணியாட்கள், வேண்டிய அளவு கடன் வசதி, வேண்டிய அளவு பொருட்களை வழங்கல் இவைகளின் மூலம் பலப் படுத்தக் கருதுகிறது. தொடக்கத்தில் தேர்ந்து எடுக்கப் பட்ட எழு மாவட்டங்களில் ஒன்றான தஞ்சாவூர்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக இத்திட்டத்தைத் தொடங்கிய மாவட்டமாகும். 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் இத்திட்டம் தொடங்கப்பட்டது. அவ்வாண்டி லிருந்து 5 ஆண்டுகளுக்கு இத்திடடம் செயல்படுத்தப்பட விருக்கிறது.

நோக்கங்கள்.—இந்நடைமுறைத் திட்டத்தில் கூறியுள்ள நோக்கங்களாவன :—

(1) மத்திய அரசாங்கம், இராஜ்ஜிய அரசாங்கங்கள் இவைகளின் கூட்டு முயற்சியாலும், மாவட்ட அமைப்புகள் வட்டார அமைப்புகள் இவைகளின் கூட்டு முயற்சியாலும்; கிராமத்தார்கள் தனிப்பட்ட கிராமத்தார்கள் இவர்களின் கூட்டு முயற்சியாலும் இந்நாட்டில் மிகவும் பயனளிக்கும் முறையில் விவசாய உற்பத்தியை விரிவுபடுத்துவதை முன்னோடி மாவட்டங்களில் (பயிலட் டிஸ்ட்ரிக்ட்) நேரிடை விளக்கமாக எடுத்துக்காட்டுவது.

(2) விவசாயினுடைய வருமானத்தையும் அவனது குடும்ப வருமானத்தையும் அதிகப்படுத்துவது.

(3) கிராமவாசியின் பொருளாதார வளங்களையும் உள் உறைந்துள்ள பொருளாதார ஆற்றல்களையும் (பொட்டன் ஷியல்) அதிகப்படுத்துவது.

(4) விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் மண்ணை மேம்படச் செய்வதற்கும் வேண்டிய அளவு விவசாய ஆதரவை திரட்டி அளிப்பது.

இந்த நோக்கங்களோடு கீழ்கண்டவை 1962–63-க்கு நோக்கங்களாக அமையும் :—

1. இந்நடைமுறைத் திட்டத்தை திட்டமிட்டு அதை நிறைவேற்றி வைப்பதில் பஞ்சாயத்து ராஜ்ஜிய நிறுவனங் கள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இவைகளை ஈடுபடச் செய்தல்.

2. இந்நடைமுறைத் திட்டத்தில் விவசாயிகள் பங்கு எடுத்துக்கொள்வதை விரிவுபடுத்துதல்.

3. செயற்கை உரங்கள், கருவிகள், பூச்சி மருந்துகள், விதைகள் இவைகளின் வினியோகத்தை எடுத்துக்கொள்வ தற்கு கூட்டுறவு சங்கங்களின் கடமையின் பங்கை விரிவுப் படுத்தலும் வலிவுப்படுத்தலும்.

4. கடன் வசதியை விற்பனையுடன் இணைத்தல்.

5. செம்மைப்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகளை விரை வாகக் கைகொள்ளச் செய்ய விரிவாக்கக் கல்வி (எக்ஸ்டன் ஷன் எடுகேஷன்), தகவல், நேரிடை விளக்கங்கள் (டிமான்ஸ்ட்ரேஷன்) இவைகளை தீவிரப்படுத்துதல்.

மாநிலம் செழிக்க மரம் நடுவீர்! நட்ட மரங்களை நிலைக்கச் செய்வீர் !!

மாவட்ட நடைமுறைத் திட்டம்.—தனிப்பட்ட குடியானவர்கள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள், பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் இவைகளைக் கலந்தாலோசித்து ஜனநாயக முறையில் இம்மாவட்ட நடைமுறைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தனிப்பட்ட குடியானவர்களின் தேவை, நற்பலனுடன் கைகொள்ளக் கூடிய செம்மைப்படுத்தப்பட்ட முறைகள், கிடைக்கக்கூடிய மூல வளங்கள் (ரிசோர்ஸ்) இவற்றைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தீவிர விவசாய மாவட்ட நடைமுறைத் திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் ஒவ்வொரு விவசாயிக்கும் அவருடன் கலந்து ஆலோசித்து தனித்தனியான பண்ணைத் திட்டங்கள் (ஃபார்ம் பிளான்ஸ்) தயாரிக்கப்பட்டன. உயிர்கழிவுப் பொருட்களான (ஆர்கானிக்) உரங்களைத் தயாரிப்பதற்கான சமுதாய கலவை உர இடங்களை அமைத்தல் (கம்யூனிட்டி கம்போஸ்ட் யார்டு), விறகுகள், பசுந்தாள் உரங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்காக பஞ்சாயத்து தோப்புக் காடுகளை (பிளான்டேஷன்) ஏற்படுத்துதல் போன்ற சமுதாய முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. ஒன்று சேர்க்கப்பட்ட பண்ணைத் திட்டங்கள் கிராமத் திட்டங்களாக அமைகின்றன. ஒப்புதலளிக்கப்பட்ட கிராமத் திட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பஞ்சாயத்து கூட்டு மன்றத்தின் ஒப்புதலுடைய வட்டார திட்டங்களாக (பிளாக் பிளான்) அமைகின்றன. இந்த வட்டாரத் திட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு மாவட்டத் திட்டமாக அமைகிறது.

பரவிய பரப்பளவு (கவரேஜ்).—1960–61-ல் இருந்த 23 வட்டாரங்களில் இந்த தீவிர மாவட்ட நடைமுறைத் திட்டம், மொத்தம் சாகுபடியான பரப்பில் 20 சத விகித பகுதியில் செயல்படுத்தப்பட்டது. 1961–62-ல் இருந்த 26 வட்டாரங்களில் 30 சத விகித பரப்பில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது.

1962–63-ல் இத்திட்டம் ஆவுடையார் கோவிலைத்தவிர்த்து 1960–61-ல் இருந்த 22 வட்டாரங்களில் 40 சத விகித பரப்பில் விரிவுபடுத்தப்பட்டது. 1961–62-ல் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மூன்று புதிய வட்டாரங்களில் (வலங்கைமான், தலைஞாயிறு, திருவையாறு) வேண்டிய அளவு பணியாட்கள் இல்லாத காரணத்தால் இத்திட்டம் விரிவாக்கப்படவில்லை—

ஆண்டு. (1)	பரவிய அளவு. (2)	வட்டாரங்களின் எண்ணிக்கை. (3)	அந்தந்த ஆண்டில் தீவிர விவசாய மாவட்ட நடைமுறைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பரப்பு. (4)	தீவிர மாவட்ட நடைமுறைத் திட்டத்தின் மொத்த பரப்பு. (5)
			ஏக்கர்.	ஏக்கர்.
1960–61	நிகரப்பரப்பில் 20%	23	228,871	228,871
1961–62	நிகரப்பரப்பில் 30%	26	114,177	343,048
1962–63	நிகரப்பரப்பில் 40%	26	84,277	427,325

தீவிர விவசாய மாவட்ட நடைமுறைத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் வாய்ப்புகள்.

1. மண் பகுப்பின்படி செயற்கை உரங்களின் அளவு சிபார்சு செய்யப்படுகிறது.

பயிர் விளைச்சலானது, பயிர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயிர் உணவுச்சத்துக்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. வேண்டிய அளவு பயிர் உணவுகளை பயிர்களுக்கு அளித்தால் விளைவு அதிகரிக்கும். பயிர்கள் ஓங்கி நன்கு வளர தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என்ற முக்கிய செடிப் பொருள்கள் அவைகளுக்கு தேவைப்படுகின்றன.

மண் பாகுபாட்டை ஒட்டி நெற்பயிருக்கு கீழ்கண்ட உரமிடும் அளவுகள் இம்மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் எடுத்துரைக்கப்படுகிறது.

இவற்றை 5,000 ராத்தல் பசுந்தாள் உரமும், 15 ராத்தல் சாம்பல் சத்துக்குச் சமமான 25 ராத்தல் மூரியேட் ஆப் பொட்டாஷ் என்ற மர உப்பைச் சார்ந்த உரமும் இட்டபின் போடவேண்டும்.

வட்டாரம். (1)	ஏக்கருக்கு தழைச் சத்து (ராத்தல்.) (2)	ஏ.என். அல்லது அமோனியம் சல்பேட்டாக ஏக்கருக்கு இவ்வளவு ராத்தல். (3)	யூரியா ஏக்கருக்கு இவ்வளவு ராத்தல். (4)	மணிச் சத்து ஏக்கருக்கு இவ்வளவு ராத்தல். (5)	சூப்பர் பாஸ்பேட்டாக ஏக்கருக்கு இவ்வளவு ராத்தல். (6)
அம்மாபேட்டை	20	100	44	40	250
திருப்பனந்தாள்	20	100	44	36	225
திருவிடைமருதூர்	25	125	55	36	225
கும்பகோணம்	20	100	44	32	200
வலங்கிமான்	30	150	66	40	250
குற்றாலம்	25	125	55	36	225
மாயூரம்	30	150	66	40	250
செம்பொன்னார் கோயில்.	25	125	55	40	250
சீர்காழி	35	175	77	36	225
ஆனைக்காரசத்திரம்	30	130	66	36	225
பாபநாசம்	20	100	44	24	150
குடவாசல்	30	150	66	40	250
நாகப்பட்டினம்	25	125	55	40	250
கொரடாச்சேரி	25	125	55	36	225
தலைஞாயிறு	25	125	55	36	225
கோட்டூர்	20	100	44	40	250
வேதாரண்யம்	30	150	66	24	150
திருத்துறைப்பூண்டி	25	125	55	36	225
சேதுபாவாசத்திரம்	35	125	77	40	250
ஒரத்தநாடு	35	175	77	40	250
பூதலூர்	20	100	44	40	250
ஆவுடையார்கோயில்	30	150	66	24	150
பட்டுக்கோட்டை	30	150	66	36	225

மற்றைய பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு சிபாரிசு செய்யப் படும் செயற்கை உரங்களின் அளவுகள் :—

	சி.ஏ.என். அல்லது அமோனியம் சல்பேட்டு.	சூப்பர்.	மூரியேட் ஆஃப் பொட்டாஷ்.
	ராத்தல்.	ராத்தல்.	ராத்தல்.
வாழை	400	300	150
கரும்பு	500	..	..
தென்னை	224	150	150
நிலக்கடலை	100	150	66
சிறுதானியங்கள்	100	50	50
காய்கறிகள்	200	200	100
புகையிலை 2-வது நெ. கலவை உரம் (12-6-6)	500	..	..

2. பயிர்களுக்கான கடன் வசதி வாய்ப்புகள்.

பண்ணைத் திட்டத்தில் ஏற்கனவேயே ஏற்பாடு செய்துள்ளபடி உறுப்பினர்களுக்கு கடன்கள் ரொக்கமாகவும் பொருளாகவும் கொடுக்கப்படுகிறது. பூரண விவசாய உதவித் திட்டம் (பாக்கேஜ் ஸ்கீம்) சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு போக நஞ்சைக்கு அதிக பட்சம் எவ்வளவு பண உதவி செய்யலாம் என்பது ஒரு ஏக்கருக்கு ரூ. 150 என ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரு போக பயிர்களுக்கு ஒவ்வொரு பயிருக்கும் ஏக்கருக்கு ரூ. 150 வரையில் இரண்டு கடன்கள் கொடுக்கப்படும்.

கீழே காண்பவை இம் மாவட்டத்தில் வெவ்வேறு பயிர்களைச் சாகுபடி செய்ய கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகைகளாகும்—

நெல்.	ரூ.	ந.பை.
120 ராத்தல் 30 ரூபாயாக ஒரு ஏக்கருக்கு 40 ராத்தல் வீதம் விதைகளின் விலை.	10	00
160 ராத்தல் 30 ரூபாய் வீதமாக ஒரு ஏக்கருக்கு 25 ராத்தல் என்ற கணக்கில் பசுந்தாள் உர விதைகளின் விலை.	5	00
ஒரு டன் 391 ரூபாய் வீதமாக ஒரு ஏக்கருக்கு 150 ராத்தல் என்ற கணக்கில் அமோனியம் சல்பேட்டின் விலை.	25	00
ஒரு டன் 230 ரூபாய் வீதமாக ஒரு ஏக்கருக்கு 150 ராத்தல் என்ற கணக்கில் சூப்பர் பாஸ்பேட்டின் விலை.	15	00
ஒரு டன் 350 ரூபாய் வீதமாக ஒரு ஏக்கருக்கு 50 ராத்தல் என்ற கணக்கில் மூரியேட் ஆப் பொட்டாஷின் விலை.	8	00
விதையில் மருந்திட்டு கலக்குவதுடன் முன் தடுப்பு முறையாக மருந்தடித்தல்.	12	00
உழுவதற்கும், நாற்று நடுவதற்கும், அறுவடை செய்வதற்கும் சாகுபடி செலவுக்கான முன் பணம்.	75	00
மொத்தம் ..	150	00

வாழை (ஒரு ஏக்கருக்கு)

	ராத்தல்.	ரூ.	ந.பை.
அமோனியம் சல்பேட்டு ..	400	72	00
சூப்பர் ..	300	37	00
பொட்டாஷ் ..	150	21	00
மொத்தம் ..		130	00

கரும்பு (ஒரு ஏக்கருக்கு)

		ரூ.	ந.பை
கடலைப் பிண்ணுக்கு	12 மூட்டைகள்	300	00
அமோனியம் சல்பேட்டு	500 ராத்தல்	90	00
அரிடான்	.. ..	5	00
50% டி.டி.டீ.யும் என்டிரினும் ..	..	45	00
மற்றவை	.. ..	10	00
மொத்தம் ..		450	00

தென்னை (ஒரு ஏக்கருக்கு)

(7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட) வயதான தோட்டங்களுக்குத்தான் இக் கடன் கொடுக்கப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

		ரூ.	ந.பை.
அமோனியம் சல்பேட்டு	224 ராத்தல்	40	00
சூப்பர்	150 ,,	18	00
பொட்டாஷ்	150 ,,	22	00
சுத்தப்படுத்துதல், பூச்சி மருந்துகள் போடுதல் முதலியன.		20	00
மொத்தம் ..		100	00

கடலை (பாசனப் பயிர்) (ஒரு ஏக்கருக்கு)

	ராத்தல்.		ரூ.	ந.பை.
விதை	..	..	55	00
அமோனியம் சல்பேட்டு	100	கலவை உரம் ..	60	00
சூப்பர் பாஸ்பேட்டு	150			
பொட்டாஷ்	66			
சாகுபடி செலவுக்கான முன் பணம்		..	35	00
மொத்தம் ...			150	00

இறைவைச் சிறு தானியங்களும், மக்காச்சோளமும் (ஒரு ஏக்கருக்கு)

	ராத்தல்.		ரூ.	ந.பை.
விதைகள்	..	..	5	00
அமோனியம் சல்பேட்டு	100	..	18	00
சூப்பர்	50	..	12	00
பொட்டாஷ்	50	..	10	00
பூச்சி, நோய் ஒழிப்பு மருந்துகள்—கந்தகத் தூள், பி.எச்.சி. தூள்.		..	5	00
சாகுபடி செலவுக்கான முன்பணம்		..	10	00
மொத்தம் ..			60	00

விளைவைப் பெருக்கி மக்கள் வாழ்வைச் சிறப்பிப்பீர்

காய்கறிகள் (ஒரு ஏக்கருக்கு)

	ரூ.	ந.பை.
விதைகள்	10	00
செயற்கை உரக் கலவைகள்	50	00
சாகுபடி செலவுக்கான முன்பணம் ..	60	00
மொத்தம் ..	120	00

புகையிலை (ஒரு ஏக்கருக்கு)

	ரூ.	ந.பை.
கடலைப் பிண்ணாக்கும் உரக் கலவையும்	300	00
பூச்சி, நோய் ஒழிப்பு மருந்துகள் ..	25	00
சாகுபடி செலவுக்கான முன்பணம் ..	175	00
மொத்தம் ..	500	00

பருத்தி (ஒரு ஏக்கருக்கு)

	ராத்தல்.		ரூ.	ந.பை.
விதைகள்		..	5	00
அமோனியம் சல்பேட்டு	200	..	36	00
சூப்பர்	100	..	12	00
பொட்டாஷ்	35	..	7	00
பூச்சி, நோய் ஒழிப்பு மருந்துகள்		..	10	00
மொத்தம்		..	70	00

(3) நேரிடை விளக்கங்கள் (டிமான்ஸ்டிரேஷன்)

(அ) பலமுறைகள் சேர்ந்து அமைந்த நேரிடை விளக்கங்கள் (காம்போசிட் டிமான்ஸ்டிரேஷன்)

நெற்பயிரின் முழு தொழிற் பழக்கங்களுக்கான (பாக்கேஜ் ஆஃப் பிராக்டிசஸ்) நேரிடை விளக்கமாக செய்து காட்டுவதற்காக போடப்பட்டு வெற்றிகரமாக நடத்திக்காட்டப்பட்ட ஒவ்வொரு நேரிடை விளக்கத்திற்கும், அந் நேரிடை விளக்கம் போடப்பட்ட நிலத்தின் உரிமையாளருக்கு ஊக்க உதவியாக (சப்சிடி) 25 ரூபாய் கொடுக்கப்படும்.

(ஆ) முழு பண்ணை நேரிடை விளக்கங்கள் (ஃபுல் ஃபாம் டெமான்ஸ்ரேஷன்ஸ்)

மேற்கூறிய நேரிடை விளக்கங்களுடன், ஒரு விவசாயியின் சொத்தின் பூறுவும் (மொத்தத்தில்) 10 ஏக்கர் எடுத்து அதில் செம்மையாக்கப்பட்ட முறைகளை கடைப்பிடிப்பதால் எவ்வாறு பண்ணையின் எல்லா வருவாயையும் உயர்த்த முடியும் என்பதையும் எடுத்துக்காட்டப்படும்.

இப்படிப்பட்ட ஒரு பண்ணை நேரிடை விளக்கம் ஒவ்வொரு விஸ்தரிப்பு அலுவலரின் பகுதிகளிலும் பணப்பட்டு வருகிறது. இந்த (நேரிடை விளக்கத்திற்கான) விவசாய மாவட்ட அலுவலராலும், விஸ்தரிப்பு அலுவலராலும், வட்டார வளர்ச்சி அலுவலராலும், கிராம சேவக்குகளாலும் தேர்ந்தெடுக்கப்படுவார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அந்தப் பகுதிக்குரிய பஞ்சாயத்தால் ஒப்புதலளிக்கப்படும்.

கீழ்க்கண்ட விவரங்கள் அடங்கியுள்ளவைகளுக்கு முதல் ஆண்டில் 10 ஏக்கர் பண்ணைக்கு ரூ. 120 ஊக்க உதவியாக அளிக்கப்படும் :—

	ரூ.	ந.பை.
(1) ஒரு ஏக்கருக்கு ரூ. 5 வீதம் விதைகளுக்கான செலவு.	50	00
(2) ஒரு ஏக்கருக்கு ரூ. 5 வீதம் பூச்சி நோய் முன் தடுப்பிற்காக.	50	00
(3) ஒரு ஏக்கருக்கு ரூ. 0·50 விதம் விதைகளில் மருந்திட.	5	00
(4) விளம்பரத்திற்காக இடது பக்கம் தலைப்பை உடையதும் வலது பக்கம் விளம்பரங்களை எழுதுவதற்கான காலி இடத்தை உடையதுமான ஒரு பெரிய அளவுப் பலகை.	15	00
மொத்தம் ..	120	00

மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்தில்கூட, அடுத்து ஒவ்வொரு வருஷத்திற்கும் கீழ்க்காணும் ஊக்க உதவி அளிக்கப்படும் :—

	ரூ.	ந.பை.
(1) ரூ. 5 வீதம் விதைகளுக்களுக்கான செலவு.	50	00
(2) ரூ. 5 வீதம் பூச்சி, நோய் முன் தடுப்பிற்காக.	50	00
(3) ஒரு ஏக்கருக்கு ரூ. 0·50 வீத விதைகளில் மருந்திட.	5	00
(4) பலகைகளை பழுது பார்த்தல் ..	5	00
மொத்தம் ..	110	00

இந்நேரிடை விளக்கப் பண்ணைகள் கிராம சேவக்குகளின் பகுதிகளிலுள்ள தலைமை இருப்பிடங்களில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. எல்லா சாகுபடி செலவுகளுக்கும், மாசூல்களுக்கும் கணக்குகள் வைத்துகொள்ள வேண்டும். விவசாயினுல் சாகுபடி செய்யப்படும் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கருக்குமேல் போகக்கூடாது.

நெல் பயிருக்கு சிபாரிசு செய்யப்படும் சீர்திருத்தப்பட்ட தொழில் முறைகள்.

(1)	குறுவை. (2)	சம்பா. (3)	தாளடி. (4)
1. ஒரு ஏக்கருக்கான விதையின் அளவு.	முரட்டு வகைகள் (ஏ.டி.டீ. 3) 70 ராத்தல் நேர்த்தியான வகைகள் (ஏ.டி.டீ. 20) 60 ராத்தல்.	40 ராத்தல்.	50 ராத்தல்.
2. விதையில் மருந்திடல்.	30 ராத்தல் விதைகளுக்கு 1 அவுன்ஸ் அக்கிரஸான் ஜி. என். என்னும் மருந்து.	30 ராத்தல் விதைகளுக்கு 1 அவுன்ஸ் அக்கிரஸான் ஜி. என். என்னும் மருந்து.	30 ராத்தல் விதைகளுக்கு 1 அவுன்ஸ் அக்கிரசான் ஜி. என். எனனும் மருந்து.
3. உயிர்க்கழிவு உரங்கள் (ஆர்கானிக்).	5,000 ராத்தல் பசுந்தாள் உரங்கள் அல்லது அதற்குச் சரியான தொழு உரம்.	5,000 ராத்தல் பசுந்தாள் உரங்கள் அல்லது அதற்குச் சரியான தொழு உரம்.	5,000 ராத்தல பசுந்தாள் உரம் அல்லது அதற்குச் சரியான தொழு உரம் அல்லது 15 ராத்தல் தழைச் சத்து. 15 ராத்தல் மணிச்சத்து. 15 ராத்தல் சாம்பற் சத்து இவற்றை அந்தந்த வட்டாரத்திற்கு பொதுவான செயற்கை உர அளவுப்படி போடுதல்.
4. செயற்கை உரங்கள் (அ) மணிச்சத்துள்ள உரமும், சாம்பல் சத்துள்ள உரமும் (பொட்டாஷ்).	அடியுமாக இடுதல்.	அடியுமாக இடுதல்.	அடியுமாக இடுதல்.
(ஆ) தழைச் சத்து அடங்கியுள்ள உரங்கள்.	1. 50% அடியுமாக இடுதல். 2. 50% 20—25 நாட்கள் கழித்து மேல் உரமாக தூவுதல்.	1. 50 % அடியுமாக இடுதல். 2. நட்டு 60 நாட்கள் கழித்து 50% மேல் உரமாக தூவல். (பயிர் நிலையைக் கவனித்து பின்பு இரண்டாம் தரமாக போடவேண்டிய உரத்தையிட வேண்டும்.)	1. 50% அடியுமாக இடுதல். 2. நட்டு 50 நாட்கள் கழித்து 50%-ஐ போட வேண்டும்.
5. இடைவெளி விடல் வரிசை நடவு,	வரிசைகளுக்கு இடையில் 6″ இடை வெளியிட்டு பயிர்களை வரிசையில் நெருக்க நடவும்.	10″×4″	8″×4″
வரிசையற்ற மொத்த நடவு.	4″×4″	6″×6″	5″×5″
6. பயிர் பாதுகாப்பு (அ) நாற்றங்கால்.	ஒரு தடவை பி. எச். சி. மட்டுமோ அல்லது பி. எச். சி.-யும் டி. டி. டீ.-யும் கலந்து தூவுதல்.	ஒரு தடவை பி. எச். சி. மட்டுமோ அல்லது பி. எச்.-சியும் டி.டி.டீ.-யும் கலந்து தூவுதல்.	ஒரு தடவை பி. எச். சி. மட்மோ அல்லது பி. எச். சி.-யும் டி. டி. டீ.-யும் கலந்து தூவுதல்.
(ஆ) நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால்.	பாலிடால் அல்லது பி.எச். சி. அல்லது என்டிரின் தெளித்தல்.	பாராதையான் அல்லது என்டிரின் அல்லது பி. எச். சி. இவற்றுடன் செம்புப் பூசணம் கொல்லியைக் (காப்பர் பங்கிசைடு) கலந்து தெளித்தல்.	பாராதையான், அல்லது என்டிரின் அல்லது பி. எச். சி. இவற்றுடன் செம்புப் பூசணங் கொல்லியைக் (காப்பர் பங்கிசைடு) கலந்து தெளித்தல்.

(பூச்சி, பூசண நோய்களுக்கு முன்தடுப்பு முறையாக அமையும் தெளிப்புகள்.)

(இ) நடவு வயல். பி. எச். சி. அல்லது என்டிரின் அல்லது பாராதையான் இவற்றுடன் செம்புப் பூசணம் கொல்லி மருந்தை கலந்து நட்டு 2 அல்லது 3 வாரங்களுக்குப் பின்பு, ஒரு தடவை (குருத்துப் பூச்சி, சுரைப் பூச்சி, தோகைப் புள்ளி நோய் இவற்றைத் தடுப்பதற்காக) தெளித்தல்.

பொறுக்கு வித்து பெருக்க விளையும்

விவசாயத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்

(தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர், சென்னை–5.)

கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செயல்பட்டு வருகின்றது. விவசாயிகளை கடன் தொல்லையிலிருந்து மீட்கவும் அவர்களுக்கு விவசாய செலவிற்காக குறைந்த வட்டியில் சுலபமான தவணைகளில் திருப்பி செலுத்தப்படக்கூடிய கடன்களை கொடுத்து உதவுவதற்கும் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டு நம் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படத் தொடங்கின. இவைகள் விவசாயிகளுக்கு மேற்கூறிய உதவிகளைச் செய்வதன் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்கி பொதுவாக கிராமப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்திருக்கின்றன. விவசாயிகளுக்கு குறுகிய கால, மற்றும் மத்திய கால கடன்களை வழங்க தற்பொழுது ராஜ்ய ரீதியில் சென்னை மாநில கூட்டுறவு பாங்கும், மாவட்ட ரீதியில் 15 கூட்டுறவு மத்திய பாங்குகளும், கிராமங்களில் சுமார் 10,000-க்கு மேற்பட்ட கூட்டுறவு நாணய சங்கங்களும் திறம்பட வேலை செய்துவருகின்றன. நீண்ட கால கடன்கள் மாநில மத்திய நில அடமான பாங்கிலும், அதனோடு இணைந்த பிரதம நில அடமான பாங்குகளாலும் செவ்வனே வழங்கப்பட்டு வருகின்றன.

ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இவ்வியக்கம் "கடன் விஸ்தரிப்பு" "கடன் மற்றும் விவசாயப் பொருள் விற்பனை இணைப்பு" போன்ற பல அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்தில் இவ்வியக்கம் 65 சதவிகித கிராமங்களில் பரவியும் 21 சதவிகித கிராமக் குடும்பங்களுக்கு சேவை செய்தும், வருடம் ஒன்றுக்கு ரூ. 6 கோடி கடனுக வழங்கியும் இருந்தது. இத்திட்டங்கள் மூன்ருவது ஐந்தாண்டு திட்டகாலத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டன, இத்திட்டங்களை நிறைவேற்ற நன்கு பயிற்சி பெற்ற சிப்பந்திகள் தேவைப்பட்டனர். இவர்களை நியமிக்க நம் மாநில அரசாங்கம் பெருவாரியான அளவில் மத்திய பாங்குகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மான்யம் அளித்திருக்கிறது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நம் மாநிலத்தில் 85 சதவிகித கிராமத்தினரை கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டுவந்து ரூ. 50 கோடி கடன் வழங்கவேண்டுமென்ற குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய ரூ. 50 கோடியில் குறுகிய, மத்திய கால கடனுக ரூ. 47 கோடியும் நீண்டகால கடனுக ரூ. 3 கோடியும் வழங்கப்படும். மூன்ரும்திட்டத்தின் இரண்டாவது ஆண்டின் இறுதியில் 76 சதவிகித மக்கள் கூட்டுறவு இயக்கத்தினுள் கொண்டு வரப்பட்டு, மாநிலத்தினுள்ள எல்லா கிராமங்களிலும் இயக்கத்தைப் பரப்பி, ரூ. 34 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதிக அளவில் கடன் வழங்க தடையாயிருந்த சில நிபந்தனைகளைத் தளர்த்தியும் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் உச்ச அளவை உயர்த்தியும் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தற்பொழுது சாகுபடி நிலத்தின் பரப்பளவையும் உற்பத்தி செய்யப்போகும் பயிரையும் பொறுத்து வேண்டிய கடன் வழங்கப்படுகிறது.

இப்பொழுது கடன் விஸ்தரிப்பு திட்டத்தைத் தவிர, ஒரு சில வட்டார வளர்ச்சி எல்லைகளில் உள்ள விவசாயிகளின் விவசாய உற்பத்திக்கான குறுகிய கால மத்திய கால கடன் தேவைகளை முழு அளவில் பூர்த்தி செய்ய "முழுப்பண திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்கள் கடன் தேவைகளை மற்ற துறைகளின் மூலம் அடைவதைவிட்டு முழு அளவில் கூட்டுறவுத் துறையிலேயே பெறவேண்டும் என்பதே இத்திட்ட[த்]தின் நோக்கமாகும். 1956–57-ம் வருடத்தில் இத்திட்டம் முதன்முறையாக இம்மாகாணத்தில் 2 பிர்க்காக்களில் செயல்படுத்தப்பட்டது. பிறகு படிப்படியாக மற்ற வட்டார வளர்ச்சி எல்லைகளில் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டு தற்சமயம் நம் மாகாணத்தில் 105 வட்டார எல்லைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதைத் தவிர, தீவிர விவசாயத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 26 வட்டார வளர்ச்சி எல்லைகளில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட எல்லையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய இலாகா அலுவலர்கள் தயாரிக்கும் உற்பத்தி திட்டங்களின் அடிப்படையில் விவசாயிகளுக்கு கடன்கள் வழங்குகின்றன. கடன் வழங்குவதைத் தவிர இத்திட்ட எல்லையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உரம். பூச்சி மருந்து போன்ற விவசாயத்திற்குத் தேவைப்படும் பொருள்களையும் விநியோகம் செய்கின்றன. ரசாயன உரங்கள் விநியோகம் செய்யும் முழு உரிமையை கூட்டுறவுச் சங்கங்களுக்கே அரசாங்கம் அளித்துள்ளது.

விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த பயிர்களை பத்திரப்படுத்தி தேவைப்பட்டபோது நல்ல விலைக்கு விற்ருல் தான் லாபம் காணமுடியும். எனவே கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை நல்ல முறையில் விருத்தி செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது. இராஜ்ய ரீதியில் ஒரு தலைமை விற்பனைச் சங்கமும், மாவட்ட ரீதியில் 15 விநியோக விற்பனைச் சங்கங்களும் மற்றும் 126 பிரதம விற்பனைச் சங்கங்களும் இம்மாகாணத்தில் இயங்கி வருகின்றன. இராஜ்யத்தில் முக்கிய வியாபார ஸ்தலங்களில் இவ் விற்பனை சங்கங்கள் இயங்கி வருகின்றன. விற்பனைச் சங்கங்களுக்கு அன்ருட அலுவல்களை ஏற்று நடத்த பயிற்சி பெற்ற அலுவலர்களை நியமிக்கவும் சங்கங்களின் லேவாதேவியை வலுப்படுத்த பங்கு மூலதனத்தை உயர்த்தவும் கடலை உடைக்கும் இயந்திரம், பஞ்சு அரைவை இயந்திரம் மற்றும் நெல் அரைக்கும் இயந்திரம் முதலியவைகளை நிறுவவும், அரசாங்கம் பண உதவி செய்கிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்களையும், பிரதம விற்பனைச் சங்கங்களையும் இணைத்து மாவட்ட விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1961-62-ம் ஆண்டில்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 9·97 கோடி மதிப்புள்ள விவசாய பொருள்களை விற்பனை செய்துள்ளன. 1962–63-ம் ஆண்டு ரூ. 10·60 கோடி மதிப்புள்ள விவசாயப் பொருள் களை விற்பனை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் சரக்குகளை சில நாட்கள் பொறுத்து நல்ல விலையில் விற்பனை செய்ய உதவும் பொருட்டும், தான்ய ஈட்டுக் கடன்கள் வழங்குவதற்கும், கிட்டங்கிகள் கட்டிக்கொள்ள அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 20 (இருபது) ஆண்டுகளுக்கு நீண்ட காலக் கடன் வசதி அளிப்பதோடு செலவில் ஒரு பகுதியை மான்யமாகவும் அளித்து உதவுகிறது. உதாரணமாக கிராம நாணயச் சங்கங்கள் கிட்டங்கிகள் கட்டிக்கொள்ள ஏற்படும் செலவில் (ரூ. 10,000-ல்) பாதி தொகையைக் கடனாகவும், பாதி தொகையை மான்யமாகவும் கொடுத்து உதவுகிறது. விற்பனைச் சங்கங்களுக்கு இங்ஙனமே அரசாங்கம் வேண்டிய உதவியைச் செய்து வருகிறது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் 293 கிட்டங்கிகள் இம்மாநிலத்தில் கட்டப்பட்டன. மூன்றும் திட்ட காலத்தில் 1,030 கிட்டங்கிகள் ரூ. 1·09 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றும் திட்ட முதல் இரண்டு ஆண்டுகளிலேயே அதாவது 1961–62, 1962–63 ஆண்டுகளில் குறிக்கோளுக்கு அதிக மாகவே 462 கிட்டங்கிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கரும்பு சாகுபடி செய்வோருக்கு உதவி செய்யும்பொருட் டும் அவர்கள் சரக்குகளை நல்ல விலையில் விற்கவும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. ஆலையில் லாபத்திலும் கரும்பு சாகுபடி யாளருக்கு பங்கு உண்டு. இம்மாகாணத்தில் 3 சர்க்கரை ஆலைகள், செங்கற்பட்டு ஜில்லாவில் படாளம் என்னும் இடத்திலும், வட ஆற்காடு ஜில்லாவில் ஆம்பூரிலும், கோயம்பத்தூர் ஜில்லாவில் அமராவதி என்னுமிடத்தி லும் நிறுவப்பட்டு வேலை செய்துவருகின்றன. மேலும், மூன்று கூட்டுறவு ஆலைகள் பதிவு செய்யப்பட்டு அவைகள் சீக்கிரமே வேலை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்தேறி வருகின்றன.

விவசாய உற்பத்தி திட்டத்தில் முக்கியமான அம்சம் கூட்டுறவு விவசாயப் பண்ணை அமைப்பதாகும். ஒரு சில ஜில்லாக்களில் கோயில்களுக்கும், மற்ற மதஸ்தாபனங் களுக்கும் சொந்தமாக நிலங்களில் சாகுபடியாளர்களைச் சேர்த்து விவசாய சாகுபடியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் தங்கள் அங்கத்தினர்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வ தோடு மட்டும் அல்லாமல் நிலத்தினின்றும் அதிகமான வருமானம் அடையவும் வழிகோலி இருக்கின்றன.

வருமானத்தை கூடுதலாக்க கூட்டுறவு பால் பண்ணைகள் விவசாயிகளுக்கு சிறந்த உப தொழிலாகும். மக்களுக்குச் சுத்தமான பால் வழங்க உதவுவதோடு அல்லாமல் கால் நடை வளம் பெருகவும் இவை பெரிதும் உதவுகின்றன. 1,000-க்கு மேற்பட்ட பால் வழங்கும் சங்கங்கள் இம் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் நாள் ஒன்றுக்கு சராசரி 70,000 பட்டணம் படிகள் பால் உற்பத்தியாகின்றது. கூட்டுறவு பால் வழங்கும் சங்க அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்கி அதன் மூலம் பயன்பெற கடன் வசதி அளிக்கப்படுகிறது.

இங்ஙனம் விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்பட்ட பொருள்களை லகுவில் பெற்றுக்கொள்ளவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த சேவை செய்கின்றன.



நாட்டுக்கு உதவும்
நல்ல பெண்

சத்துள்ள உணவை சமைப்பவளே
"உணவின் தரம் உயர,
மக்களின் நலம் பெருகும்."

நல்ல பண்ணையை தேர்ந்தெடுங்கள்

சி. சங்கரநாராயணன், B.Sc., (Ag.) M.S. (W.S.A.), சு. இராமமூர்த்தி, B.Sc. (Ag.),
விரிவினைப் பிரிவு, கோவை.

தேர்ந்தெடுக்கப்படும் பகுதி போதிய அளவு மழை பெறும் இடமாகவும் பயிர்களுக்கு ஏற்ற பருவச் சூழ்நிலை உடையதாகவும் இருக்கவேண்டும்.

நில அமைப்பு.—நிலம் ஏற்றத் தாழ்வின்றி சமவெளியாக இருப்பது விரும்பத்தக்கது. தாழ்வான நிலங்களில் வடிகால் வசதி குறைவு. அதிக சரிவான நிலங்களில் மண் அரிப்பு ஏற்படும். இதனைப் பண்படுத்த அதிக செலவாகும். பாசன வசதியை முன்னிட்டு பள்ளத்தாக்கு நிலங்களைத் தேர்ந்தெடுக்குங்கால் மண் அரிப்பைத் தடுக்க வழி வகைகள் செய்துகொள்ளவேண்டும்.

2—3 அடி ஆழத்திற்கு சாகுபடிக்கு ஏற்ற மேல் மண் இருக்கவேண்டும். சோதனைக் குழிகள் சில வெட்டிப் பார்த்து நிலத்தின் உள் அமைப்பை அறியலாம். $1\frac{1}{2}$ அடி—2 அடி ஆழத்திற்கு மண்ணின் நிறமும் தன்மையும் சீராக இருக்கவேண்டும். களிமண் கலந்த மண் சிறந்தது. சிவப்பு, கறுப்பு அல்லது சாம்பல் நிறம் உடையதாக இருப்பது நல்லது. களர் அறிகுறிகள் இன்றி இருக்க வேண்டும்.

மண் வளம்.—நிலத்தில் காணும் செடி கொடிகளின் வளர்ச்சி ஓரளவுக்கு மண் வளத்தைக் காட்டும். செழித்து வளர்ந்த மரங்கள், புதர்கள் நிறைந்த நிலம் வளமுடையதென்றும், செடிகள் வளங்குன்றியோ, நிலம் வறண்டோ இருந்தால் நிலம் முறையே வளம் குன்றியதென்றும் வளமற்றது என்றும் கொள்ளலாம்.

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான உணவுச் சத்துக்கள் போதிய அளவில் மண்ணில் இருப்பது அவசியம். மண்ணின் தரத்தையும் வளத்தையும் மண் மாதிரி எடுத்து அரசாங்க இரசாயன நிபுணரிடம் அனுப்பி குறிப்பாக அறிந்துகொள்ளலாம்.

நீரின்றி அமையாது உலகு.—எளிதாகவும், குறைந்த செலவிலும் கிணறுகள் வெட்ட வசதியிருக்க வேண்டும். சுற்றுப்புற கிணறுகள் மூலம், நீர்மட்டம், தண்ணீரின் தன்மை முதலியவற்றை ஓரளவு அறியலாம், ஓங்கி உயர்ந்த மரங்கள் நிலத்தின் அடியில் ஊற்று இருப்பதற்கு அறிகுறியாகக் கருதப்படுகிறது. நதிகள், வாய்க்கால், குளங்கள் முதலிய இதர பாசன வசதிகள் இருக்கின்றனவா என்றும் அறியவேண்டும்.

நஞ்சை நிலங்களுக்கு நல்ல வடிகால் வசதி இருத்தல் அவசியம்.

போக்கு வரத்து வசதிகள்.—பண்ணையை அருகிலுள்ள நகரத்துக்கோ, கிராமங்களுக்கோ நேரடியாகப் பெருஞ் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதி இருக்க வேண்டும். விளைபொருள்களைக் கொண்டுசெல்வதற்கும், பண்ணைக்குத் தேவையான பொருள்களைக் கொண்டுவருவதற்கும் எளிதாக இருக்கும்.

வேலைக்கு ஆள் தேவை.—பண்ணை வேலைக்குத் தேவையான கூலியாட்கள் சுற்றுப்புறங்களிலிருந்து சுலபமாகக் கிடைப்பார்களா என்று தெரிந்துகொள்ளவேண்டும். பண்ணை அலுவல்கள் தட்டின்றி நடக்க கூலி ஆள் பிரச்னை இல்லாதிருக்கவேண்டும்.

வணிப வாய்ப்புக்கள்.—முக்கிய சந்தைகள் கூடுமிடங்கள், வணிக முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள் சமீபமாகப் பண்ணை அமைந்தால் தரகர்களின்றி தங்கள் விளைபொருள்களை நேரடியாகச் சென்று இலாபகரமாக விற்க முடியும்.

இவையனைத்தையும் மனதில் கொண்டு பண்ணையின் உற்பத்தித்திறன், வருவாய் ஆகியவற்றை மதிப்பிட்டு நீங்கள் அளிக்கும் தொகைக்கு ஈடு கொடுக்கக்கூடியதாக இருக்கிறதா என்பதை அறிந்துகொள்வது எல்லாவற்றிலும் மிக முக்கியமானதாகும்.

நீரூற்று கண்டுபிடிப்பவர்

32 ஆண்டு அனுபவமுள்ளவர். சர்க்காராலும் விவசாயிகளாலும் சர்டிபிகேட் பெற்றவர். புதியதாய் கிணறு வெட்டுகிறவர், போரிங் போடுகிறவர்களுக்கு விஞ்ஞான ரீதியில் நீர் ஊற்று பரிசீலனை செய்து உப்பு நீர், சுண்ணாம்பு நீர், சவுடு நீர் நீங்கலாகவும், மலைப் பிரதேசங்களில் பாறையற்ற இடமாக கிணற்றுக்கு நீர் ஊற்று கண்டுபிடிப்பவர்.

நீரூற்று பரிசீலனை கட்டணம்

1 கிணறுக்கு	..	ரூ.	30·00
2 ,,	..	ரூ.	55·00
3 ,,	..	ரூ.	75·00
4 ,,	..	ரூ.	100·00

பழைய கிணறு பரிசீலனை கட்டணம்

ஊற்றிருந்தால்	..	ரூ.	15·00
ஊற்றில்லாவிடில்	..	ரூ.	5·00

ரயில் சார்சு தனி, விபரம் வேண்டுவோர் ரிப்ளை கார்டு. (சுலபமான வழி) கிணறு போரிங் போடுகிறவர்கள் கிணற் போருக்கு குறிப்பிட்ட நிலத்தில் 3 அடி கோலால் இருபுறம் அளந்து தங்கள் நிலத்தின் பிளானும் அளவுடன் அனுப்பினால் தங்கள் தபாலில் உள்ள அகல நீளத்தில் ஸ்கெச்சு போட்டு ஊற்று விபரம் குறித்து அனுப்பப்படும். தங்கள் தபாலில் அதற்கு கட்டணம் ரூ. 3·50. தங்களுக்கு பதில் உள்பட.

இ. கி. முருகேச பிள்ளை,
வாட்டர் டிவைனர்,
ஒரையூர் போஸ்ட்,
(வயா) பண்ருட்டி, தெ. ஆ. ஜில்லா.

எலி! - ஒரு தீராத தொல்லை

(டி. எஸ். தீத்தாரப்பன்—ஏ. சுப்பிரமணியன், ஆடுதுறை.)

இடம் : தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமம்.

பாத்திரங்கள் : ராமசாமி, முருகன், பிச்சை, கலியன், ஆகிய விவசாயிகள்.

ராமசாமி : என்ன முருகா, சம்பா விளைச்சலெல்லாம் எப்படி ?

முருகன் : அட போ அண்ணே. எல்லாம் அந்த முருகனைத்தான் கேட்கனும். (வானத்தை நோக்கி) பாதிக்குப் பாதி எலி வெட்டுலே போயிடுச்சு. இந்த வாட்டி முதலாளி ஐயாகிட்டே எப்படி சொன்ன குத்தகை நெல் அளக்கப்போறேனோ ! எனக்கே தெரியல்லே. அவரும் ரெண்டு வருஷமா குத்தகையை மாத்திக் கொடுக்கப் போறேன்னு பயம் காட்டுறாரு.

பிச்சையும் கலியனும் : (ஒரே குரலில்) ஆமாண்ணே. எங்க வயல்லேயும் இந்த வருஷம் எலிவெட்டு ஜாஸ்தியா போயி வெறும் வைக்கத்தான் மிஞ்சிச்சு.

ராம : முருகா, ஒவ்வொரு வருஷமும் இந்த மாதிரி ஏதானும் ஒரு காரணத்தை வைச்சு மகசூல் குறையுது இல்லையா. அதைப் பார்த்தும் நாம்ப பாட்டிலே இருந்தா என்ன அர்த்தம். இதுக்கு ஏதாச்சும் ஒரு வழி பார்த்துட வேண்டியதுதான்.

முரு : அண்ணே, போன வருஷம் குறுவை, மழையினால் பாதிச்சுபோச்சு ; சம்பாவிலே கொலை நோய் வந்து மகசூல் கம்மியாயிட்டுது. இதுக்கெல்லாம் ஒரு வழியா ஏதோ புதுரகம் வாங்கி பயிர் செஞ்சோம். ஆனா இந்த எலித்தொல்லை பெரிய தொல்லையாயிட்டுதே. அதுக்கு கிட்டி வையுடான்னு முதலாளி சொன்னாரு. வைச்சேன். வைச்சும் இவ்வளவு சேதமாயிட்டுதே.

ராம : ஏம்பா முருகா. நாம் என்ன இன்னிக்கு நேத்தியா இந்த எலிகளை பார்க்கிறோம். அதுகளுந்தான் தம்பி ஆயிரக்கணக்கிலேபெருகுது. நேத்து சாயந்திரம் நம்ப டெமான்ஸ்டிரேட்டர் ஐயாகிட்டே பேசிக்கிட்டு இருந்தேன். அவரு சொன்னாரு, "ராமசாமி, இந்த எலி பெருகிறமாதிரி எந்த பிராணியும் பெருகிறதில்லே. ஒரு வரப்பு எலி ஒரே பருவத்தில் 20–25 குட்டிகள் போடும். இந்த குட்டி எலிகளும் மூணு மாசத்திலே பெரிசாயி அதது சுதந்திரமா போயி பெருக ஆரம்பிச்சிடும்னு". இந்த மாதிரி தெரிஞ்சவுடனே நாமல்லாம் அதை ஒழிக்க திட்டம் போடணும். அதைவிட்டுட்டு..........

கலியன் : அட போண்ணே. நானுந்தான் கிட்டியெல்லாம் வைச்சேன். பாஷாணம் கூட வெச்சுப் பார்த்தேன். இந்த எலிகள்கிட்டே ஒண்ணும் நடக்கல்லே. நாளுக்கு நாள் வெட்டு தான் அதிகமாச்சு.

ராம : கலியா. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்று பெரியவங்க சும்மா சொல்லிட்டு போகல்லேடா. நாமும் நம்மால் ஆனதை செய்யணும். (இது சமயம் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் வருகிறான்).

முரு : வாய்யா பெருமாளு. ஏது இந்தப் பக்கம் ? சந்தைக்குப் போயி ஏக தடபுடலா சாமான்கள் வாங்கிட்டு போறாப்பிலே இருக்கு.

பெரு : ஆமாண்ணே. சந்தைக்குத்தான் போயிட்டு போறேன். நீங்க நாலுபேரும் கூடிக்கிட்டு பேசறதைப் பார்த்தா ஏதாச்சும் சமாச்சாரம் இருக்கும்னு பட்டுச்சு. அதுக்காக இப்படி வந்தேன்.

ராம : சரியாச் சொன்னே பெருமாளு. எல்லாம் இந்த எலித் தொல்லையைப் பத்தி பேசிக்கிட்டு இருந்தோம். ஆமா, உங்க கிராமத்திலே எப்படி விளைச்சல். அங்கேயும் எலி வெட்டுத்தானா ?

பெரு : மகமாயி புண்ணியத்திலே அப்படியொன்னும் ரொம்ப பாதிக்கல்லே. கொஞ்சம் எலி வெட்ட ஆரம்பிச்சுது. டயத்துலே கவனிச்சு அதை தடுக்க ஏற்பாடு செய்தோம். விளைச்சல் கொஞ்சம் குறைந்தாலும், அவ்வளவு மோசமில்லெ.

முரு : அப்படியா பெருமாளு. எப்படி அந்த சனியனை தடுத்தீங்க ? கொஞ்சம் வெவரமா சொல்லேன்.

பெரு : சம்பா நடவு நட்ட ஒரு மாசத்திலேயிருந்து எலிக் கிட்டி வைக்க ஆரம்பிச்சோம். கைவசம் 50 கிட்டி இருந்திச்சு. அப்படி வைச்சும் எலிவெட்டை பூரணமாய் தடுக்க முடியல்லே. என்ன பண்றதுன்னு யோசிச்சோம். பக்கத்து ஊரு, அதான் ஆடுதுறை பண்ணையிலே போயி அங்க உள்ள அதிகாரிகளைக் கலந்தோம். அவங்க சொன்னாங்க "இந்தாப்பா பெருமாளு, கிட்டி வைச்சா மட்டும் போறாது. பல வகையிலே இந்த எலிகளை பிடிச்சு கொல்லணும்னு." அவங்க பண்ணையிலும் எலிவெட்டு ஜாஸ்தியா இருந்திச்சாம். அவங்க அதை எப்படி தடுத்தாங்களோ அதேமாதிரி நாங்களும் செய்தோம். வயலுக்கு 20 கிட்டி, நட்ட $1\frac{1}{2}$ மாசத்திலேயிருந்து வைச்சு பிடிக்கணும். இந்த எலிகளுக்குப் பாஷாணத்தைப்பத்தி ஒரு பயம் உண்டு. அதுங்களும் தந்திரக்கார எலிகளாச்சே. அதனாலே நாமளும் தந்திரமாத்தான் அதை கொல்லணும். சம்பா வயல் வரப்புகள்லே கொஞ்ச நாளைக்கு அதாவது ஒரு நாலு அல்லது ஐஞ்சு நாளைக்கு வெறும் சோறோ, பொரியோ, அல்லது கருவாடோ பல இடங்கள்லே வைக்கணும். எலியெல்லாம் வந்து வந்து திண்ணுட்டு போகும். இதே

[14-ம் பக்கம் பார்க்கவும்]

இப்பொழுதே காய்கறி தோட்டம் போடுங்கள்

குறுகிய கால கேழ்வரகு-இ.சி. 4728

(நி·புணர், சிறுதானிய ஆராய்ச்சி, கோவை-3.)

* இது ஒரு 90 நாள் பயிர்.

* ஏக்கருக்கு சராசரி 1,000 கிலோ (2,200 ராத்தல்) தானியமும் 1,300 கிலோ (2,860 ராத்தல்) தாளும் கொடுக்கிறது.

* கோ. 7 கேழ்வரகைவிட 10 நாட்கள் முன்பாக அறுவடைக்கு வருகிறது. இதன் தாளை கால்நடைகள் விரும்பி உண்ணும்.

* E.C. 4728 கேழ்வரகு இறைவை சாகுபடிக்கே ஏற்றது. வைகாசி (மே—ஜூன்) மாதத்திலும், மார்கழி (டிசம்பர்—ஜனவரி) மாதத்திலும் இதனைப் பயிரிடலாம்.

ஒரு ஏக்கர் நடவுக்கு ஐந்து செண்ட் நாற்றங்கால் நிலத்தில் 2½ கிலோ கிராம் (ஐந்து ராத்தல்) விதை விதைத்தால் போதுமானது. நாற்றங்கால் நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழுது ஏக்கருக்கு 10 டன் விகிதத்தில் தொழு உரம் போட்டு மறுபடியும் ஒரு முறை உழவேண்டும். பின்பு சிறு பாத்திகள் கட்டி தேவையான அளவு சாம்டல் போட்டுக் கொத்திவிட வேண்டும். தண்ணீர் பாய்ச்சி, கொத்திவிடும் பதத்தில் கொத்தி நல்ல புழுதியாக்கி பாத்திகளைச் சமமாக்க வேண்டும். மண் ஒரு நாள் ஆறிய பிறகு ஏக்கருக்கு 200 ராத்தல் விகிதத்தில் சி.ஏ.என். உரம் போட்டு விதை விதைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்யப்படும் நிலத்தை மூன்று முறை நன்றாக உழுது நாற்றங்காலுக்குப் போட்டதைப் போலவே ஏக்கருக்கு 10 டன் தொழு உரமும், அத்துடன் 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும் போட்டு உழுதுவிட்டு, பாத்திகள் கட்டி ஏக்கருக்கு 200 ராத்தல் வீதம் சி.ஏ.என். போடவேண்டும். 22 நாட்களுக்குப் பின் நாற்றைப் பிடுங்கி குழிக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் 6"× 6" இடைவெளியில் நடவேண்டும். நாற்று நட்ட மூன்றாவது நாளில் தண்ணீர் பாய்ச்சவேண்டும். அதன் பிறகு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சவேண்டும். முற்றிய கதிரை முதலில் அறுத்து விட்டுப் பின்பு இரண்டாவது முறையாக அறுவடையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

E.C. 4728, 85-நாள் வயதுடைய ஏ.கே.பி. 2 கேழ்வரகு ரகத்தைவிட 56·2 சதம் அதிக மகசூல் அளிக்கிறது. ஏ.கே.பி. 2-ஐ அதிக அளவில் பயிரிடும் தென் ஆற்காடு, செங்கற்பட்டு விவசாயிகள் அதற்கு பதிலாக E.C. 4728 கேழ்வரகையே பயிரிட்டு அதிக பலன் பெறுங்கள். E.C. 4728 இதர மாவட்டங்களுக்கும் ஏற்றது.

[13-ம் பக்கத் தொடர்ச்சி]

மாதிரி இந்த நாலஞ்சு நாள் கழிஞ்சதும் பாஷாணத்தை அதே மாதிரி சோத்திலேயோ அல்லது பொரி, கருவாட்டிலேயோ கலந்து வைச்சா அதையும் வழக்கமா திங்கிறமாதிரி தின்னு எலிகள் செத்துப்போகும். இதேமாதிரி திருப்பி திருப்பி செஞ்சா, எலி தொந்தரவு ஓரளவு கொறையும். இதுமட்டுமில்லாம, வயல்வரப்புகளில் கஷ்டத்தைப் பார்க்காம, எலி வளைகளை வெட்டி தாய் எலியையும் குட்டி எலிகளையும் பிடிக்கணும். அதுல்லே பாருங்கண்ணே, இந்த குட்டி எலிகளெல்லாம் பெரிசாகி அதது தனிக் குடித்தனம் வைக்கிறதுக்குள்ளே புடிக்கணுமாம்! இல்லேன்னு அது அது பெருக ஆரம்பிச்சுடும். இதுகள்லாம் பயிர் முத்திர சமயம் தான் குட்டி போட்டு பெருகுமாம். அதனால் நம்ப வயல்வரப்புகளை குறுவை டயத்திலே வெட்ட முடியாவிட்டாலும், சம்பா, தாளடி அறுக்கிற சமயத்திலேயாவது வரப்பை வெட்டி புடிக்கணும். இப்படி புடிக்கிறதுனலே அடுத்த வருஷமாவது மகசூல் நல்லா கிடைக்கும். எலி தொந்திரவும் கொறையும் பாருண்ணே! நான் அந்தப்பண்ணைக்குப் போயிருந்தப்பகூட அவங்க சொன்னங்க, சம்பா அறுப்புக்கு அப்புறம் எலிவலைகளை வெட்டி புடிச்சதுல ஒரு மாசத்திலே 2,000 எலி பெரிசும் சின்னதுமா புடிச்சாங்களாம். இன்னமும் புடிச்சுட்டிருக்காங்க.

பிச்சை : அடேங்கப்பா! 2,000 எலியா! இதென்ன ஒரு பட்டாளமே இருக்கும் போல இருக்கே. உம்.... அப்புறம் சொல்லுண்ணே.

பெரு : நாமளும் நம்ம வயல்வரப்புகளை உயரத்தையும் அகலத்தையும் குறைச்சி புல் பூண்டு இல்லாம சுத்தமா வைக்கணும். இந்த மாதிரியெல்லாம் அப்ப அப்ப கவனிச்சா எலித்தொல்லை ஒரு தீராத தொல்லையா இருக்காது.

ராம : அட ஆமாங்கடா. அடுத்த வருஷத்திலே நம்ம பெருமாளு சொன்னமாதிரி எல்லாம் சேர்ந்து இந்த எலிகளை ஒரு கை பார்த்திடுவோம். அப்ப போகலாம் வாங்கடா.

பெரு : அடடா, அண்ணே! ஒரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்துட்டேனே. அந்தப் பண்ணையிலே பல ரகங்களை பயிரிட்டதிலே கோயமுத்தூர் 25-ஐ எலி ஏகமா வெட்டியிருந்தும்கூட மற்ற தினுசுகளைவிட நல்ல மகசூல் கொடுத்துச்சாம். அதனால் நம்பளும் இந்த ரகத்தையே பயிரிட்டா நல்லதுனனு சொன்னங்க. அப்போ சரியண்ணே. பொழுதும் சாய்ஞ்சிடுச்சு. நான் போயிட்டு வாரேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

—(o)—

எங்கெல்லாம் தண்ணீர் தேவையோ அங்கு காண்பீர்கள்

ஜான்ஸ்டன்

வெர்டிகல் பம்புகள்

இரவு பகலாக வேலை செய்துகொண்டிருப்பதை !

நிர்மாணம், பராமரிப்பு இரண்டும் சுலபம். இயக்குவதும் எளிது. நம்பகமான ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகள் அவரவர் தேவைக்குகந்த அநேக சைஸ்களிலும் கிடைக்கும். வாடிக்கையாளர் கேட்கும் அளவுத் திட்டப்படி தயாரித்து மாற்றியமைக்கக் கூடிய உறுப்புகளுடன் வழங்கப்படுகின்றன. 50 ஆண்டு அநுபவத்தை பக்கபலமாக கொண்ட ஜான்ஸ்டன் பம்புகள் எத்தகைய கடின உழைப்பிற்கும் ஈடுகொடுத்து, மிகக் குறைவான செலவில் மிக அதிக அளவு தண்ணீர் இறைத்துக் கொடுக்கும்.

நாட்டிலும் நகரத்திலும், ஆற்றிலும் குளத்திலும், வீட்டு உபயோகத்திற்கும் விவசாயத்திற்கும் எதற்கும் பயன்படுத்தக் கூடிய இந்த ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகளை நிர்மாணிக்க சொற்ப இடமிருந்தால்போதும். தண்ணீர் இறைப்பது சம்பந்தமான உங்கள் எந்த பிரச்னைக்கும் ஒரே விடை ஜான்ஸ்டன் பம்பு நிர்மாணம்தான்.

மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள் ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட் 2, பேர்லி பிளேஸ், கல்கத்தா-1

ஜான்ஸ்டன் பம்புகளைப் பற்றி இன்னும் விவரங்கள்
ஜலம் இறைக்கும் சக்தி ; மணிக்கு 1000 காலன் அளவிலிருந்து ஐந்து லட்சம் காலன் அளவு வரை.
குதிரை சக்தி வகை ; 2 எச்.பி முதல் 200 எச்.பி. வரை.
டீசல்/ஹாரிஸாண்டல் மோட்டாரிலும், ஏஸி/டிஸி அல்லது மின்சார கியர் மற்றும் பெல்ட் இயக்கத்திலும் வேலை செய்யும்.
ஒரு வருட உத்தரவாதம் உடையது. சகஜமான உழைப்பு மற்றும் பராமரிப்பு நிலைமையில் இந்த பம்புகள் சாதாரணமாக 15 ஆண்டுகள் வேலை செய்யும்.
விற்பனைக்குப்பிறகு, பயிற்சிபெற்ற மெகானிக்குகளைக்கொண்டு செப்பனிடும் வசதியுண்டு.
இந்தியாவில் இந்த பம்பு நிர்மாணிக்கப்பட்ட உயர்ந்த பக்ஷ ஆழம் 635 அடி.

GROUP OF MACNEILL & BARRY LTD COMPANIES

JOHNSTON TURBINE PUMPS

நெல்லுக்கு இறைத்த நீர்

(எஸ். கமலநாதன், பருத்தி அபிவிருத்தி உதவி அலுவலர், கோவை.)

நெல்லுக்கு நீர்ப்பாசனம் அதிகம் வேண்டுமாதலால் ஆற்றுப் பாசன நிலங்கள், குளங்கள், ஏரிகளின் கீழுள்ள ஆயக்கட்டுகள் இவையே பெரும்பாலும் நெல் சாகுபடிக்கு ஏற்றவை. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் தோட்டக்கால் பயிராகவும் கிணறுகளிலிருந்து நீர் இறைத்து நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

நன்செய் நிலங்களுக்கு வேண்டிய நீரை ஆறு, குளங்கள், ஏரிகளிலிருந்து வாய்க்கால் வழியாகப் பெறுவதால் நெல்லுக்கு நீர்ப்பாய்ச்ச ஆகும் செலவு சொற்பமே. ஆனால் தோட்டக்கால் பயிருக்குத் தேவையான நீரைக் கிணறுகளிலிருந்து இறைத்தே பெற வேண்டுமாதலால், நீர்ப்பாசனச் செலவு அதிகமாகிறது. கிணற்று நீர் அதிக ஆழத்தில் இருந்தாலும், நிலம் மணற்பாங்காக இருந்தாலும், நீர்ப்பாசனச் செலவு இன்னும் அதிகமாவது இயல்பு. மாரிக்காலத்தைவிட கோடைக் காலத்தில் பயிருக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படும். ஆதலால், நீர்ப்பாசனச் செலவும் வெப்பமிகுந்த காலங்களில் அதிகரித்தல் இயற்கையே.

தோட்டக்கால் பயிரின் நீர்ப்பாசனச் செலவு கிணற்றின் நீர்நிலை, மண்வளம், தட்பவெப்பநிலை இவையின்றி நீர் இறைப்புச் சாதனம், பயிரின் தேவை ஆகியவற்றையும் பொறுத்தது. குழாய் மூலம் இறைப்பதைக் காட்டிலும் கவலையால் இறைப்பதில் செலவு அதிகம். 40 காலன் தண்ணீர் பெறுமானமுள்ள கவலையின் உதவியால் 40 அடி ஆழத்தில் நீர்நிலை உள்ள கிணற்றிலிருந்து இறைத்து ஒரு ஏகரா நீர்ப்பாய்ச்சுவதற்குச் சுமார் 15 ரூபாய் செலவு ஆகும். மின் சக்தியால் இயங்கி நிமிடத்துக்கு 60 காலன்கள் தண்ணீர் இறைக்கும் குழாய் மூலம் ஒரு ஏக்ராவின் நீர்ப்பாய்ச்சும் செலவு 5 ரூபாயாகும். இதுவே நிமிடத்துக்கு 180 காலன்கள் தண்ணீர் இறைக்குமானால் நீர்ப்பாசனச் செலவு இரண்டே ரூபாயில் அடங்கும். இவையே எண்ணெயின் உதவியால் இயங்குமாயின் செலவு இரட்டிப்பு ஆகும்.

பயிரின் தன்மையைப் பொறுத்தும், தண்ணீரின் தேவையும் நீர்ப்பாசனச் செலவும் வேறுபடும். நெல்லுக்கு நிறைய நீர் தேவை. ராகி, சோளம், நிலக்கடலை, பருத்தி முதலியவற்றிற்குச் சொற்ப அளவு நீர்ப்பாசனம் போதுமானது. குறித்த அளவு தண்ணீரைக் கொண்டு எப்பயிர் எவ்வளவு பரப்பளவில் பயிரிடலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு விநாடிக்கு ஒரு கன அடி தண்ணீர் (மழை நீர் உட்பட) பயிர்க்காலம் முழுவதும் பாயுமானால் எப்பயிர் எவ்வளவு ஏகரா பரப்பளவில் பயிரிடமுடியுமென்பதை கீழே காணலாம்—

			ஏகரா.
நெல் (குறுவை)	..	..	68
நெல் (தாளடி)	..	..	80
நெல் (சம்பா)	..	..	76
ராகி	..	..	130
நிலக்கடலை	..	..	156
சோளம்	..	..	163
கம்போடியா பருத்தி	..	..	190

உள்ள நீரைக்கொண்டு நெற் பயிரைப்போல் இரு மடங்கு பரப்பளவில் ராகியையும் நிலக்கடலையையும் மூன்று மடங்கு பரப்பளவில் பருத்தியையும் பயிரிடலாம். மேலும், இயற்கையில் வாய்க்கால் வழியாகப் பாயும் நீரைவிட கிணற்றிலிருந்து இறைத்த நீருக்குச் செலவு அதிகம்; ஆதலால் தோட்டக்காலில் இட்ட நெற்பயிருக்கு நீர்ப்பாசன செலவு அதிகமாகிறது.

கிணறு வசதியுள்ள நன்செய் நிலங்களிலும், தோட்டக்கால்களிலுங்கூட கோடைக்காலங்களில் நெற்பயிரிடுவது உண்டு. உள்ள சொற்ப நீரின் உதவியால் நெல் சாகுபடி ஆரம்பமாகும். நெற்பயிர் கதிர் விடும் தருவாயில் தண்ணீருக்குத் தட்டு ஏற்பட்டு பயிர் சாவி ஆவதும் உண்டு. அத்தருணம், நெற் சாகுபடியாளர்கள் பயிரைக் காக்கும் பொருட்டுத் தண்ணீருக்காகத் தவிப்பதும், அண்டையிலுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீரை அதிக விலை கொடுத்து நீர்ப்பாய்ச்சுவதும், நீர்ப்பாசனச் செலவு அதிகமாகி பொருள் நஷ்டம், மனக்கஷ்டம் அடைவதையும் காணலாம்.

சொற்ப நீர் வசதியுள்ள விவசாயிகள் கோடைக்காலத்தில் நெல்லைப் பயிரிடுவானேன்? பின்னர் தண்ணீரில்லாமல் தொல்லைப்படுவானேன்? தென் மாவட்டங்களில், அதிலும் மிக முக்கியமாக இராமநாதபுரம் மாவட்டத்தில், ஏரிப்பாசன நன்செய் நிலங்களில் நெல் அறுவடைக்குப் பின் உகாண்டா பருத்தி கோடைக்காலத்தில் பயிரிடப்பட்டு மிகவும் பயனடைவது கண்கூடு. இதேபோல் மீதி விவசாயிகளும் ஏன் அதைப்பின்பற்றி பலனடையக் கூடாது?

நன்செய் நிலங்களிலும், தோட்டக்கால்களிலும், நெல் அறுவடைக்குப்பின் எம் சி.யு. 2 என்னும் உயர்தரப் பருத்தியை தை, மாசி மாதங்களில் பயிரிடலாம். இதன் வயது சுமார் ஆறு மாதங்கள். இன்னும் குறைந்த வயதுள்ள பருத்தி வேண்டுவோர் பஞ்சாப் 216 எப். என்னும் குறுகிய கால பருத்தியை விதைக்கலாம். இது சுமார் ஐந்து மாதங்களில் காய்த்து, வெடித்து ஓய்ந்து விடும். பருத்திச் செடிகளை உழுது நெல்லுக்கு வேண்டிய தழை உரமாகவும் பயன்படுத்தலாம். எம்.சி.யு. 2 பருத்தியைப் பயிரிடுவதால் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 300 ரூபாயும் பஞ்சாப் பருத்தி பயிரிடுவதால் சுமார் 250 ரூபாயும் நிகர வருவாய் கிடைக்கும்.

நெல்லுக்குப் பின் பருத்தியைப் பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள் பல. கிடைத்த நீரைக் கொண்டு நெற்பயிரைக் காட்டிலும் மூன்று மடங்கு நிலத்தில் பருத்தியைப் பயிரிடலாம். இதனால் வருவாய் அதிகம் கிடைக்கிறது. பருத்தியின் தழை நெற்பயிருக்குப் பசுந்தாளுரமாகப் பயன்படும். நெல்லினுடைய சல்லிவேர் பூமியின் மேல் பாகத்திலுள்ள சத்தையும், பருத்தியின் ஆணிவேர் ஆழப்புதைந்துள்ள பூசாரத்தையும் பயன்படுத்துவதால் பூமியிலுள்ள சத்து நன்கு பயனபடுத்தப்படுகிறது. பருத்திச் செடி நெற்பயிரைப் பாதிக்காது. வேண்டிய உரமளித்தால் நெல்லும் பருத்தியும் நல்ல பலன் தரும்.

தண்ணீர் பற்றாக் குறை உள்ள நிலங்களில், கோடைக்காலத்தில் நெற்பயிரிட்டுக் கடைசியில் தண்ணீர் போதாமல், நெல்லுக்கு இறைத்த நீர் விழலுக்கு இறைத்த நீராக வீணாகி நெற்பயிர் சாவி ஆவதைவிட, அதிக அளவில் பருத்தியைப் பயிரிட்டு பயன் அடைவது நல்லது.

நெருக்கடி தீர பெருக்குவீர் பருத்தியை!

பயிர்ப் பாதுகாப்பில் முன்னெச்சரிக்கை

(PROPHYLACTIC TREATMENT)

ஸ்ரீ வி. மஹாதேவன், பயிர்செடி பாதுகாப்பு அலுவலர், தஞ்சாவூர்; ஸ்ரீ கே. வி. ஸ்ரீனிவாசன், தொழில் நுணுக்க உதவியாளர், தஞ்சாவூர்.

பூச்சிகளினால் பயிருக்கு ஏராளமான நஷ்டம் என்பது யாவரும் அறிந்ததே. இந்த நஷ்டத்தைத் தவிர்க்க முன்னெச்சரிக்கையான தடுப்புமுறையே சாலச் சிறந்ததும் மிகவும் சிக்கனமும் ஆகும். அநேக விவசாயிகள் பூச்சி தோன்றியவுடன் மருந்தடிக்காமல் தானகவே மறைந்து போகும், அல்லது மழை பெய்தால் மறைந்துவிடும் என்று நினைத்து, பிறகு காலங் கடந்து போய் பூச்சி சேதம் அதிகமானபிறகு மருந் தடிக்கிறார்கள். அதனால் எவ்வளவு மருந்தடித்தாலும், ஓரளவு பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டு நஷ்டமேற்பட்டு விடுகிறது.

ஒவ்வொரு பயிருக்கும் அதில் தோன்றக்கூடிய பூச்சிகளுக்குத் தகுந்தவாறு எடுக்கக்கூடிய முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் கீழே விளக்கப்படுகிறது :

(1) நெல்.—பொதுவாக எல்லா ஜில்லாக்களிலும் சம்பா அல்லது நீண்ட கால பருவப்பயிரில் குருத்துப் பூச்சி அதிக சேதம் விளைவிக்கிறது. கொள்ளை நோய் அல்லது புள்ளி நோயும தோன்றுகிறது. பாலிடாலும் காப்பர் மருந்தும் (Copper funficide) கலந்து பயிரில் கீழே கண்டபடி 3 முறை தெளிக்க வேண்டும் :—

(1) நாற்று பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னால் ஒரு முறை

(2) நடவு நட்டு 15 நாளிலிருந்து 1 மாதத்திற்குள் ஒரு முறை

(3) 1 மாதம் கழித்து மற்றொரு முறை.

ஏக்கருக்கு பாலிடால் மருந்து 200 சி.சி. யும், 1 கிலோ காப்பர் மருந்தையும் 80 காலன் தண்ணீரில் கலந்து ஒவ்வொரு முறையும் தெளிக்க வேண்டும். இந்த மருந்துகள் தெளிப்பதால் மேற்படி பூச்சி, நோய்களைத்தவிர மற்ற பூச்சி, நோய்களும் வராமல் தடுக்கப்பட்டுவிடும். பாலிடால் போன்ற ஒரே மருந்தை திரும்ப திரும்ப உபயோகிப்பதால், நாளடைவில் பூச்சிகளுக்கு அந்த மருந்தை தாங்கக்கூடிய சக்தி எற்படக்கூடுமாதலால், மும்முறையும் பாலிடால் உபயோகிப்பதற்குப பதிலாக, பாலிடால் ஒரு முறையும், என்ட்ரின் ஒரு முறையும், பி.எச்.சி. 50 சத வீகிதம் ஒரு முறையும் உபயோகிக்கலாம். இது வல்லாமல், அக்டோபர், நவம்பர் மாதங்களில் குருத்துப்பூச்சியின் வண்ணத்திப்பூச்சி அதிகமாக தோன்ற ஆரம்பித்தவுடன் வயலில் இரவில் வெளிச்சம் வைத்து மண்ணெண்ணெய் கலந்த தண்ணீர் கொண்ட பாத்திரத்தில் ஏராளமாக பிடித்துவிடலாம்.

இது பொதுவாக எல்லா பிரதேசங்களிலும் எல்லா பருவத்திலும் செய்யக்கூடிய நடவடிக்கையாகும். ஆனால் பருவத்திற்கும், பிரதேசத்திற்கும் தகுந்தவாறு நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளலாம். உதாரணமாக, தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் குறுவைப் பயிரில் பூச்சி நோய்கள் அதிகம் தோன்றுவதில்லை. அதனால் காப்பர் மருந்து தெளிப்பது அவசியம் இல்லை ; பாலிடால் மருந்து ஒரு முறை தெளித்தால் போதுமானது ; மேற்படி சிபாரிசில் மூன்றும் முறையாக கொடுக்கப் பட்டுள்ள நேரத்தில் தெளித்தால் போதும்.

மற்ற ஜில்லாக்களிலும் "கார்" பயிராக பயிரிடப் படும் குறுகிய காலப்பயிரில் பாலிடால், காப்பர் மருந்துகள் ஒருமுறை அல்லது இரண்டு முறை தெளித்தால் போதுமானது.

மானாவாரியாக சாகுபடியாகும் நெல் பயிரில் கறையான் தோன்றுகிறது. சிவகங்கை, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கந்தர்வக்கோட்டை முதலிய பகுதிகளில் அதைத்தடுக்க கறையான் தோன்றும் காலத்திற்கு சற்று முன்பாக பி.எச்.சி. மருந்தை உபயோகிக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில், குறுவைப் பயிரில் கதிர் பருவத்தில் பல்காரிட் வண்டு தோன்றும் பிரதேசங்களில் பயிர் பூவிட்டவுடன் ஒருமுறை பி.எச்.சி. 10 சத விகிதம் மருந்தை ஏக்கருக்கு 8 கிலோகிராம் வீதம் தூவ வேண்டும். அவசியமானால் மற்றொரு முறை, இதே மருந்தை பயிர் விளைந்து காய்வதற்கு முன்னால் தூவவேண்டும்.

(2) பருத்தி.—இந்தப் பயிரில் அநேகமாக எல்லா பிரதேசங்களிலும் காய்ப்புழுவும், கருங்கிளை (Black Arm) நோயும் தோன்றுகின்றன. இவைகளைத் தடுக்க முன்னெச்சரிக்கையாக 3 முறை பூச்சி, நோய் மருந்துகளைத் தெளிக்க வேண்டும். (1) விதைத்த ஒரு மாதத்தில் என்ட்ரினும், காப்பர் மருந்தும் கலந்து தெளித்தல், (2) ஒரு மாதம் கழித்து பாலிடாலும், காப்பர் மருந்தும் கலந்து தெளித்தல், (3) இன்னும் ஒரு மாதம் கழித்து பாலிடாலும், காப்பர் மருந்தும் கலந்து தெளித்தல். காய்ப்புழுவைக் கட்டுப்படுத்த என்ட்ரின் மருந்தும், மற்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த பாலிடாலும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால், என்ட்ரினையும், பாலிடாலையும் மாற்றி மாற்றி உபயோகிக்குமாறு சிபாரிசு செய்யப்படுகிறது. ஒவ்வொரு முறைக்கும் ஏக்கருக்கு 10 அவுன்ஸ் என்ட்ரின் அல்லது 200 சி.சி பாலிடாலையும், ஒரு கிலோகிராம் காப்பர் மருந்தையும் 80 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

மேற்படி தடுப்பு முறைகளினால் மற்ற பூச்சிகளும் கட்டுப்படுத்தப்படும். ஒரு பிரதேசத்தில் பருத்திப் பயிரில் நோய்களே தோன்றுவதில்லை என்றால் காப்பர் மருந்து இல்லாமல் பூச்சி மருந்துகளை மட்டும் உபயோகிக்கலாம்.

காய்ப்புழு, தண்டில்கூன்வண்டு தோன்றும் பிரதேசங்களில் பயிரின் காய்ப்பு முடிந்தவுடன், எல்லா செடிகளையும் வயலைவிட்டு அப்புறப்படுத்துவதன் மூலம் செடிகளில் இருக்கும் பூச்சிகள் அதிலேயே தொடர்ந்து வாழ்ந்து மறு பயிருக்கும் பரவாமல் தடுக்கலாம்.

(3) **கரும்பு.**—இந்தப்பயிரில் குருத்துப்பூச்சி (Early Shoot borer) எல்லா பிரதேசங்களிலும் காணப்படுகிறது. இதைத் தடுக்க கரணை விதைத்து 1 மாதத்தில், என்ட்ரின் மருந்து ஒரு அவுன்சை 1 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது டி.டி.டி. 50 சுத மருந்து 1 ராத்தலை 20 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். பிறகு பூச்சி தோன்றுவதைப் பொறுத்து 3 வாரத்திற்கு ஒரு முறையாக மேற்படி மருந்தை மேலும் இரண்டு முறைகள் தெளிக்கலாம். இதனால் பைரில்லா, ஒட்டுப்பேன் (Mealywing) முதலிய பூச்சிகளும் கட்டுப்படுத்தப்படும். தவிர நட்ட ஒரு மாதத்தில் பயிருக்கு ஒரு முறை மண் அணைத்தால் இந்த பூச்சியின் சேதம் குறையும்.

கறையான் தோன்றும் பிரதேசங்களில் கரணை விதைப்பின்போதே சாலில் பி.எச்.சி. 10 சத விகித மருந்தை ஏக்கருக்கு 8 கிலோகிராம் வீதம் தூவிவிட்டால் அதன் உபத்திரவம் அநேகமாக இருக்காது.

(4) **புகையிலை.**—இந்தப்பயிரில் அசுவினிப் பூச்சியும் (Aphids), வெட்டுப் புழுவும், (Prodenia), இலைப்புள்ளி நோயும் அநேகமாக எல்லா பிரதேசங்களிலும் காணப்படுகிறது. இதைத்தடுக்க என்ட்ரின் மருந்தையும் டைதேன் மருந்தையும் நட்ட ஒரு மாதத்தில் ஒரு முறையும் பிறகு ஒரு மாதத்தில் மற்றொரு முறையும் தெளிக்கலாம். ஏக்கருக்கு என்ட்ரின் 10 அவுன்சும், டைதேன் 1½ ராத்தலும் 60 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். என்ட்ரினுக்குப் பதிலாக பாலிடால் மருந்தும் தெளிக்கலாம். சாம்பல்நோய் (Powdey Mildew) காணப்படும் பிரதேசங்களில், சல்பர் மருந்தை மேற்படி காலங்களில் செடிகளின் அடியில் தூவ வேண்டும்.

(5) **மிளகாய்.**—இந்தப்பயிரில் த்ரிப்ஸ் பூச்சியும், காய் உதிரல், காய் அழுகல், செடி காய்தல் (Wilt) முதலிய நோய்களும் அநேகமாக எல்லாபிரதேசங்களிலும் தோன்றுகின்றன். காய்ப்புழுவும் சில பிரதேசங்களில் காணப்படுகிறது. இதைத் தடுக்க பி.எச்.சி. 50 சதவிகித மருந்தும், டைதேன் அல்லது காப்பர் மருந்தும் சேர்த்து 4 முறை உபயோகிக்க வேண்டும். நட்ட ஒரு மாதத்தில் முதல் தெளிப்பும், பிறகு ஒரு மாதம் விட்டு ஒரு மாதம் 3 முறைகளும் தெளிக்கலாம். ஒவ்வொரு முறையிலும் ஏக்கருக்கு பி.எச்.சி. 50 சத விகித மருந்து 3 ராத்தலையும் டைதேன் 1½ ராத்தல் அல்லது காப்பர் மருந்து 2 ராத்தலையும் 60 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மருந்து தெளிக்க வசதியில்லாவிட்டால், த்ரிப்ஸ் பூச்சியைத்தடுக்க, 15 நாட்களுக்கொரு முறை பி.எச்.சி. 10 சத விகித மருந்தைத் தூவி வரவேண்டும். காய்ப்புழு தோன்றும் பிரதேசத்தில், காய்ப்பு ஆரம்பமானவுடன் முன்னெச்சரிக்கையாக டி.டி.டி. மருந்தை தெளிக்கவோ தூவவோ வேண்டும்.

(6) **வெங்காயம்.**—மிளகாய்ப் பயிரில் கூறியபடி மருந்துகளை உபயோகித்தால், இந்த பயிரில் தோன்றும் த்ரிப்ஸ் வெங்காயப்புழு (Cutworm) முதலியனவற்றைத் தடுக்கலாம்.

(7) **கத்தரி.**—எபிலாக்னா வண்டு எல்லா பிரதேசங்களிலும் காணப்படுகிறது. காய்ப்பு ஆரம்பிக்குமுன் ஒரு முறை பாலிடால் மருந்து தெளிக்க வேண்டும். இதனால் தத்துப்பூச்சி (Jassids), இலை சுருட்டும் புழு (Leaf roller), அசுவினி (Aphids), குருத்துப்புழு (Bud worm) முதலியனவும் கட்டுப்படும். காய்ப்பு ஆரம்பித்தவுடன் ஒரு முறை டி.டி.டி. மருந்து ஒரு ராத்தலுக்கு 30 காலன் தண்ணீர் வீதம் கலந்து தெளித்தால் காய்ப்புழுவும் மற்ற பூச்சிகளும் தடுக்கப்படும்.

(8) **வெண்டை.**—கத்தரிப் பயிரில் கூறியபடி மருந்துகளை உபயோகித்தால் இந்தப் பயிரில் தோன்றும் தத்துப்பூச்சி, காய்ப்புழு முதலியவையும் தடுக்கப்படும்.

(9) **பூசணி, பரங்கி, புடலை முதலிய பயிர்கள்.**—சிவப்பு, கருப்பு வண்டுகள் (Aulacophora beetles) இந்தப் பயிர்களில் எல்லா பிரதேசங்களிலும் காணப்படுகிறது. இதைத் தடுக்க கால்சியம் ஆர்சினேட் மருந்தை 4 மடங்கு சுண்ணாம்புடன் கலந்து காய்ப்பு ஆரம்பிக்கு முன்பே தூவவேண்டும். இதனால் எபிலாக்னா வண்டு, கொடி உறிஞ்சும் நாவாய் பூச்சி (Stinkbug), பச்சைகாவடிப்புழு (Snakegourd Seniloopér) முதலியனவும் கட்டுப்படுத்தப்படும். பழ ஈ தோன்றும் பிரதேசங்களில், காய்கள் பழுக்க ஆரம்பித்தவுடன் பாலிடால் 1 அவுன்சை 25 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

(10) **மாமரம்.**—இதில் எல்லா பிரதேசங்களிலும் தத்துப்பூச்சி (Hopper) காணப்படுகிறது. இதைத்தடுக்க டி.டி.டி. 50 சத விகிதம் மருந்து 1 ராத்தலுக்கு 30 காலன் தண்ணீர் வீதம் கலந்து பூவிட ஆரம்பித்தவுடன் ஒரு முறையும், காய்ப்பு ஆரம்பிக்கும் சமயம் ஒரு முறையும் தெளிக்க வேண்டும். இதனால் பழ ஈக்களும் கட்டுப்படுத்தப்படும்.

பேயர் அக்ரோ கெம் லிமிடெட்

பம்பாய்-4.

52/54, ரத்தன் பஜார், மதருஸ்-3.

டிப்டெரெக்ஸ் S. P. 80

நிலக்கடலையை படை படையாய் அழிக்கும் சிவப்புக் கம்பளிப் பூச்சியை—முற்றும் வளர்ந்த 20 நாட்களுக்கு மேற்பட்டவைகளையும்—அதி விரைவில் கண்டிப்பாக ஒழிக்க வல்லது- கோயம்புத்தூர், பொள்ளாச்சி, விழுப்புரம், திருத்தணி, மதுரை, வேலூர், திருவள்ளூர், சிவகங்கை முதலிய இடங்களில் செய்த பரிசோதனைகளில் வெற்றி கண்ட மருந்து. பழச்செடிகளை அழிக்கும் புழுக்களை மிகச் சுலபமாகவும், சிக்கனமான முறையில் ஒழிக்கவும் சிபார்சு செய்யப்படுகிறது.

மெடானி ஸ்டாக்ஸ் 25%

பயிர்களின் சாரத்தை உறிஞ்சி, விஷ வியாதிகளைப் (VIRUS DISEASE) பரவச்செய்யும் அசுவுணி, பேன், புகையான் இவைகளை அழிக்கும். பருத்தி, மிளகாய், கத்திரி, உருளைக்கிழங்கு, புகையிலை, காபி, தேயிலை முதலிய பயிர்களுக்கு ஏற்றது.

அஸன்டால், நெகுவான்

கால் நடைகள், ஆடு, கோழிகளைப் பாதிக்கும் பேன், உண்ணி, ஈக்கள் முதலியவைகளை ஒழிக்கச் சருமத்தின்மேல் பூசப்படும் சிறந்த மருந்து. கோழிப்பண்ணைகளில் விரும்பி உபயோகப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு, கேரளா பூர்ண விநியோகஸ்தர்கள்:

ஏ. வி. தாமஸ் & கம்பெனி லிட்.
தபால் பெட்டி 47, ஆலப்புழை.

ஏ. வி. தாமஸ் & கம்பெனி (இந்தியா) லிட்.
தபால் பெட்டி 1603, மதருஸ்-1.

கோயமுத்தூர் ஜில்லா :

ஆர். சுப்ரமண்யம்,
53, பொன்னுரங்கம் ரோட்,
ஆர்.எஸ். புரம், கோவை.

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் :

ஏ. பி. வி. சன்ஸ்,
13, சுவாமி சந்நிதி வீதி,
கீழமாசி வீதி, மதுரை.

தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லாக்கள் :

ராஜாராம் டிரேடர்ஸ்,
பஜாஜ் மான்ஷன்,
வில்லியம்ஸ் ரோட், திருச்சி-1.

திருச்சிராப்பள்ளி ஜில்லா :

பி. எச். ஷேக் அலாவுத்தின்,
தபால் பெட்டி 462,
பாலக்கரை ரோட், திருச்சி-8.

திருநெல்வேலி ஜில்லா :

எஸ். ஆர். சுப்ரமண்ய பிள்ளை,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கன்னியாகுமரி ஜில்லா :

தாம்ஸன் ஏஜன்ஸிஸ்,
நாகர்கோவில்.

சேலம், ஏற்காடு :

தி ஏற்காடு காபி கியூரிங் வொர்க்ஸ் லிமிடெட்
கண்ணன்குறிச்சி போஸ்ட், சேலம்.

நெற்பயிரின் இலையைத் தாக்கும் சில முக்கிய புழுக்களும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளும்

[P. R. நாகராஜ ராவ், B.A., B. வேலாயுதம், B.Sc.(Ag.), G. வரதராஜன், B.Sc.]

நெல் பயிரிடும் ஒவ்வொரு விவசாயியும் பலவிதமான புழுக்கள் தங்கள் பயிரின் இலைகளைத் தின்று, அழிப்பதை அறிவர். ஆயினும் அவை பயிருக்குச் செய்யும் நாசத்தின் அளவை அறிந்திருக்க இயலாது. எத்தகைய செடியாயினும் முதலில் உணவுச்சத்து செடியின் பச்சை இலைகளில்தான் தயாராகிறது. அவ்வாறு தயாரான உணவுச்சத்து பயிருக்கேற்ப, பின் தானியமாகவும், கிழங்காகவும், பழமாகவும், செடியில் சேர்த்து வைக்கப் படுகிறது. எனவே, உணவு உற்பத்தி செய்யும் இலைகள் பூச்சியால் சேதப்படுத்தப்பட்ட பிறகு, அப்பயிரினின்று கிடைக்கும் மகசூல் குறைவது திண்ணம்.

புழுக்கள், வெட்டுக்கிளிகள், வண்டுகள், 'மைட்' என்ற சிறுவகை சிலந்திகள், "திரிப்ஸ்" என்னும் பேன் முதலிய பல பூச்சிகள் நெற்பயிரின் தோகையைத் தாக்கி அழிக்கின்றன. இவற்றுள் புழுக்கள் சில சமயங்களில் அதிக அளவில் தோன்றி பயிரை அழிக்கின்றன. இவ்வாறு காணப்படும் புழுக்களுள் முக்கியமானவை (1) படைப்புழு அல்லது நெளியான், (2) இலை சுருட்டும் புழு, (3) கூண்டுப்புழு, (4) மஞ்சள் கம்பளிப் புழு, (5) பர்ஞரா புழு, (6) கொம்பு புழு என்பனவாகும்.

இவை விட்டில் அல்லது பட்டுப்பூச்சி என்ற இனத்தை சேர்ந்தவை. முழுதும் வளர்ந்த பூச்சிகள் பறக்கும் தன்மை வாய்ந்தவை. இவை நெற்பயிர் அல்லது வரப்பில் உள்ள புல்லில் தனித்தனியாகவோ அல்லது கூட்டமாகவோ முட்டையிடுகின்றன. இம் முட்டைகளிலிருந்து வெளிவருபவைதான் நாம் பயிரில் அடிக்கடி காணும் புழுக்கள் (படங்கள் அ) இவை பாம்புபோல் சில முறைகள் தோல் உரிக்கின்றன. பயிரைத் தின்று வளர்ச்சியடைந்த புழுக்கள் சலனமற்ற கூட்டுப்புழுவாக (படங்கள் ஆ) மாறும். இந்த நிலையில் உண்மையான கால்களும், இறக்கைகளும் வளர்ந்து பின் முற்றும். வளர்ந்த பறக்கக்கூடிய விட்டில் அல்லது பட்டுப்பூச்சிகளாக (படங்கள் இ) வெளிவருகின்றன. இவ்வாறு முட்டையிலிருந்து வளர்ந்த பூச்சி வெளிவர சுமார் ஒரு மாத காலமாகிறது. இந்த வளர்ந்த விட்டில் பூச்சிகள் நேரடியாக பயிரைப் பாதிப்பதில்லை. ஆனல் இவை இடும் முட்டைகளிலிருந்து தோன்றும் புழுக்களே, பயிரின் சோலைகளை அழிக்கின்றன—

இவ்வாறு பொதுவான வாழ்க்கையும் வளர்ச்சியுமுடைய இப்பூச்சிகளின் தனித்தனியான குணங்களையும் அறிவது அவசியம்.

(1) **படைப் புழு.**—இது படைபோல் வயல்விட்டு வயல் சென்று பயிரை அழிக்கவல்லது. இதனுல் இதைப் "படைப் புழு" என்று கூறுவர். சில இடங்களில் இதை "நெளியான்" என்றும் சொல்வதுண்டு. வெளிர்ப்பச்சை நிறமுள்ள புழுவாதலால் கண்ணுக்கு எளிதாகப் புலப்படுவதில்லை. வளர்ந்த புழு சுமார் $1\frac{1}{2}$ அங்குல நீளத்தில் வழவழப்பாக இருக்கும் (படம் 1-அ) இரவில் அதிகமாக சஞ்சரித்து பயிரை அழிக்கும். நாற்றங்கால்கள் இதனுல் அதிக சேதமடைவதுண்டு. வளர்ந்த புழு மண்ணுக்குள் சென்று கூட்டுப்புழுவாக மாறும் (படம் 1-ஆ) இதனின்று வெளிவரும் வளர்ந்த விட்டில் பூச்சி (படம் 1-இ). கரும் பழுப்புநிறமுள்ளது. வெளிவந்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் ஏராளமாக முட்டையிடும்.

(2) **இலை சுருட்டும் புழு.**—இவை நீளவாட்டத்திலோ அல்லது நுனி இலையை மடித்தோ இலையை சுருட்டும். இவ்வாறு சுருட்டிய இலைக்குள் இருந்துகொண்டு, இலையின் பச்சை பாகத்தைச் சுரண்டித் தின்னும். வளர்ந்த புழு சுமார் $\frac{1}{2}$ அங்குல நீளமிருக்கும் (படம் 2-அ) இலை மடிப்பில் கூட்டுப்புழுவாக மாறி (படம் 2-ஆ) பின் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் சிறு விட்டில் பூச்சியாக வெளிவரும் (படம் 2-இ).

(3) **கூண்டுப் புழு.**—இப்புழுக்கள் பச்சை நிறமுள்ளவை; சுமார் $\frac{1}{2}$ அங்குல நீளமுள்ள துண்டுகளாக நெற்பயிரின் இலையை வெட்டி, குழாய்போல சுருட்டி அதனுள் வசிக்கும் (படம் 3-அ) இவ்வாறு கூடுபோன்ற அமைப்பில் வசிப்பதால்தான் இதைக் 'கூண்டுப் புழு' என்பர். ஒரே செடியில் இவ்வாறு பல கூடுகள் தொங்குவதைக் காணலாம். இன்னிலையிலேயே இப் புழுக்கள் இலையின் பச்சை பாகத்தைச் சுரண்டித் தின்னும். வளர்ந்த புழு இலைக்கூட்டிலேயே கூட்டுப் புழு பருவத்தை அடையும் (படம் 3-ஆ) முழுதும் வளர்ந்த விட்டில் பூச்சி சிறியதாக, வெள்ளை நிறத்தில் சிறு பழுப்பு கோடுகளுள்ள இறக்கைகளை உடையது (படம் 3-இ) இப்புழுக்கள் வடிகால் வசதி இன்றி தண்ணீர் தேங்கி நிற்கும் வயல்களில் அதிகம் காணப்படும். இது நீரினுள்ளும் சுவாசித்துக் கொண்டிருக்க இயலும். எனவே, இதற்கு மருந்தடிக்கும்போது வயலில் தண்ணீர் வடிகட்ட வேண்டியது அவசியம். இயலாவிட்டால் தண்ணீரிலும் D.D.T. அல்லது மண்ணெண்ணையை தெளிப்பது அவசியம்.

(4) **மஞ்சள் கம்பளிப்புழு.**—இப் புழுக்கள் மஞ்சள் நிறத்தில் கரும்பழுப்பு கோடுகளுடன் காணப்படும். உடல் முழுதும் ரோமம் அடர்ந்திருக்கும். ரோமம் கொத்து கொத்தாக நான்கு இடங்களில் மேல் நோக்கிக் காணப்படும். (படம் 4-அ) வளர்ந்தபுழு சுமார் $1\frac{1}{2}$ அங்குல நீளம், உடலில் உள்ள ரோமத்தால் கூடுபோல் கட்டி


(அ) புழுப்பருவம்
(ஆ) கூட்டுப்புழுப் பருவம்
(இ) வளர்ந்த பூச்சி
1. படைப்புழு.
2. இலை சுருட்டும் புழு
3. கூண்டு புழு
4. மஞ்சள் கம்பளிப் புழு
5. பர்ரை .புழு
6. கொம்பு புழு

அதனுள் கூட்டுப்புழுவாக மாறும். (படம் 4-ஆ) இக் கூடுகள் நெற்பயிரில் ஒட்டிக்கொண்டிருப்பதையும் காண லாம். வளர்ந்த பூச்சி வைக்கோலை ஒத்த, மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகக் காணப்படும் (படம் 4-இ).

(5) பர்ஞராபுழு.—இப்புழுக்கள் இலைகளை ஒட்டை போன்ற நூலால் பாலம் போல் பிணைத்திருக்கும் (படம் 5-அ) இவ்வாறு பிணைத்த பாகத்திற்குள் இருந்து கொண்டு இலையைத் தின்னும். வளர்ந்த புழு சுமார் $1\frac{1}{2}$ அங்குல நீளமிருக்கும். புழு வழவழப்பாக பச்சை நிறத்தில் காணப்படும். புழுவின் தலையில் 'V' போன்ற கோடு காணப்படும். இலையிலேயே கூட்டுப் புழுவாக மாறும் (படம் 5-ஆ) இதனின்று வெளிவரும் வளர்ந்த பூச்சிகள் கரும் பழுப்பு நிறமான இறக்கையுடையவை. இறக்கையில் சிறு வெள்ளைப் புள்ளிகள் உண்டு (படம் 5-இ) இவை தத்தித் தத்தி பறப்பதால் ஆங்கிலத்தில் 'ஸ்கிப்பர்' (Skipper) என்றும் கூறுவர்.

(6) கொம்புப் புழு.—இது பர்ஞரா புழுவைப் போலவே பச்சை நிறம் உடையது. ஆனால் உடல் சொர சொரப்பாக இருக்கும். தலையில் இருகொம்புகள் போன்ற அமைப்புண்டு. (படம் 6-அ) இலையைத் தின்று வளர்ந்த புழு கூட்டுப்புழுவாகி இலையில் (படம் 6-ஆ) தொங்கிக் கொண்டிருக்கும். முழுதும் வளர்ந்தபூச்சிக்கு பெரிய இறக்கைகள் உண்டு. இறக்கைகள் புகையிலையை ஒத்த பழுப்பு நிறமுடையவை. முன் இறக்கையில் கண் போன்ற மஞ்சள் புள்ளி இருக்கும் (படம் 6-இ).

இவ்வாறு ஒவ்வொரு புழுவும் தனித்தனி குண முடையது. ஆயினும், அவை இலைகளை சுரண்டியோ அல்லது அரித்தோ தின்பதால் பூச்சிமருந்தடித்து அவற்றை அழிப்பது எளிது. இப்புழுக்களைக் கட்டுப்படுத்த பொதுவாக பி.எச்.சி. 10 சதவீதம் (B.H.C. 10%) அல்லது டி.டி.டீ. 5சத வீதம் (D.D.T. 5%) மருந்து ஏக்கருக்கு 20 ராத்தல் வீதம் தூவினால் போதுமானது. இவை மற்ற குருத்துப் பூச்சி, தத்துப்பூச்சி முதலியவற்றுடன் சேர்ந்து காணப்பட்டால், என்டிரின் அல்லது பாலிடால் மருந்தையும் உபயோகிக்கலாம். மருந்தடிக்குமுன் கூடிய வரை வயலில் தண்ணீர் வடிகட்டிவிட வேண்டும். காலை அல்லது மாலை நேரத்திலும் பொதுவாக அதிக காற்றில்லாத போதும் மருந்தடிக்க வேண்டும். பூச்சி மருந்துக்கள் அதிக விஷமுள்ளவை என்பதையும், கவனத்தில வைக்க வேண்டும்.

ராமன்ஸ் இன்ஜினீரிங் ஒர்க்ஸ்
ஆபீஸ் : 2/27, பிராட்வே, சென்னை-1.
Show Room & Workshop : 98, வால்டாக்ஸ் ரோடு (வுட்வார்ப்), கொண்டித்தோப்பு, சென்னை-1.
தந்தி : 'VENPALCO' போன் : 24558



(அரசாங்க அங்கீகாரம் பெற்றது.)

எல்லா நூதன விவசாயக் கருவிகளும், சேடை கலக்கும் கருவி, தழை மிதிக் கருவி, கடப்பாரை, விதை முளைப்புத் தொட்டி, கவலைச் சால், வெல்லக் கொப்பரை முதலியவைகள் நயமான விலைக்குக இடைக்கும்.

தயாரிப்பாளர்:

ராமன்ஸ் இன்ஜினீரிங் ஒர்க்ஸ்,
2 27, பிராட்வே, சென்னை-1.
கிளை : 36, ஆசூரித் தெரு, திருவள்ளூர்.

விவசாயிகளுக்கு ஓர் வேண்டுகோள்

காலநிலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அன்றாடம் கிடைக்கும் வானிலை அறிக்கையை சென்னை விவசாயத்துறை உடனடியாக ஆராய்ந்து அன்றே அதற்கான எச்சரிக்கையையும் அந்த காலநிலை மாறுபாட்டால் பயிரில் தோன்றக்கூடிய பூச்சி பூஞ்சணங்களையும் அவைகளை தடுக்கும் வழிகளையும் அகில இந்திய ரேடியோவில் விவசாயிகளுக்கு செய்தியாக தினமும்

மாலை 6-05 முதல் 6-15 வரையில் பிராந்தியச் செய்தினும்,

மாலை 6-15 முதல் 7-15 வரையில் திருச்சி நிகழ்ச்சியிலும்

(சுமார் 6-30 முதல் 6-45-க்குள்) அறிவிக்கிறது.

விவசாய பெருமக்களே இச்செய்தி தங்களுக்கு எவ்வகையில் பயன்படுகிறது என்றும் அச்செய்தியை இன்னும் எவ்வாறு சீர்திருத்தி அமைக்கலாம் என்றும் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்க கோருகிறோம்.

விவசாயச் செய்தி அலுவலர்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

உங்கள் விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற வேண்டுமா ?

ஒழுங்குமுறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யுங்கள்

(V. ஸ்ரீனிவாசன், உதவி வர்த்தக அலுவலர், சென்னை.)

தமிழ்நாட்டிலுள்ள தஞ்சை, திருச்சி, செங்கல்பட்டு வடஆற்காடு, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் நீர்வள வசதியிருப்பதால் நெல் அதிகமாக பயிரிடப்படுகிறது. மதுரை, இராமநாதபுரம். திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் அமைந்திருக்கும் மண்வளத்தின் தன்மையாலும் சாதகமான சீதோஷ்ண நிலையாலும் பருத்தி அதிக அளவில் இம்மாவட்டங்களில் விளைவிக்கப்படுகிறது. இதுபோன்று தென் ஆற்காடு, வட ஆற்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களில் நிலக்கடலை மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்விதமாக எங்கெங்கு விவசாயப் பொருள்கள் கணிசமான அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றதோ அந்த இடங்களில் விவசாயப்பெருமக்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கும், விதை விதைப்பதற்கும், மற்றைய விவசாய உபயோகத்திற்கும் தேவையானதுபோக மிகுதியானவற்றை விற்று விடுகிறார்கள். பொதுவாக உணவு தான்யங்களில் அவ்விதம் விற்கும் அளவு குறைவானதாகும். உற்பத்தியாகும் அளவில் ஏறக்குறைய 35 லிருந்து 50 சதவீதம் விற்பனை செய்யப்படுகிற தென்று கணக்கெடுத்துள்ளார்கள். இவ்விதமாக மார்க்கெட்டில் விற்பனைக்கு வருவது நிலக்கடலை விளைச்சலில் சுமார் 56 சதவீதம் என்றும், எள் விளைச்சலில் சுமார் 90 சதவீதம் என்றும், பருத்தி உற்பத்தியில் 100 சதவீதம் என்றும், தெரியவருகிறது.

மொத்த மார்க்கெட்டுகளில் விற்கப்படும் பொருள்களின் அளவு மிக அதிகமாகவிருந்த போதிலும், தனிப்பட்ட விவசாயிகள் ஒவ்வொருவரும் விற்கும் அளவு மிகக் குறைந்ததேயாகும். சாதாரணமாக ஒரு விவசாயி ஒரு வண்டி பாரமோ அல்லது அதற்கு அதிகமோ விற்பனை செய்ய வேண்டுவதாயிருந்தால் தன்னுடைய பொருள்களை மாட்டு வண்டியிலேற்றி அண்மையிலுள்ள வியாபார ஸ்தலத்திற்கு எடுத்துச் சென்று அங்கு கமிஷன் ஏஜண்டின் உதவி கொண்டோ அல்லது புரோக்கரின் உதவி கொண்டோ தன்னுடைய பொருளை விற்று முதல் செய்கிறார்.

இவ் விற்பனையில் முக்கிய குறைபாடுகள் :—

* விற்பனைப்பொருள்களை விற்க வியாபார ஸ்தலங்களுக்கு எடுத்துச் செல்ல அதிக செலவு.

* கமிஷன் ஏஜண்டுகளிடம் முன்பணம் பெற்றிருப்பதால் ஒரு குறிப்பிட்ட கமிஷன் ஏஜண்டுகளிடம், குறிப்பிட்ட புரோக்கர்கள் மூலம்தான் விற்க முடிகிறது.

* கடனையும் வட்டியையும் வசூல் செய்வதில் அக்கறை காட்டும் கமிஷன் ஏஜண்டுகள் வியசாயிக்கு நல்ல விலை வரும் வரை காத்திருந்து விற்றுக் கொடுக்க ஆர்வம் காட்டுவதில்லை.

* உள்ளூர் வியாபாரிகளின் நெருங்கிய தொடர்பு கொண்ட ஏஜண்டுகள், வியாபாரிகளுக்குச் சாதகமான விலையை நிர்ணயிப்பதிலேயே கவனம் செலுத்துவார்கள்.

* உள்ளூர் அளவுகாரர்களின் அளவை சரியானவையாயிருக்காது. விவசாயிக்கு நஷ்டமளிக்கும்.

* கமிஷன், அளவுகாரார்களுக்குக் கூலி, மகிமை, முதலிய வரிகளுக்காக பணம் பிடிக்கப்படுகிறது—வரம்புக்கு மீறிய கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

இக்குறைபாடுகளை நீக்க தமிழ்நாட்டு அரசாங்கம் 1939–ம் வருடம் சென்னை பணப்பயிர்கள் மார்க்கட்டுகள் சட்டம் (Madras Commercial Crops Markets Act) இயற்றியது 1959–ம் வருடம் சென்னை விவசாயப் பொருள்கள் மார்க்கட்டுகள் சட்டமும் (Madras Agricultural Produce Markets Act) இயற்றப்பட்டன. இது 1962-ம் வருடம் அக்டோபர் மாதம் 22-ந்தேதியிலிருந்து அமுலாக்கப்படுகிறது.

இச்சட்டங்கள்

* எந்த ஒரு விவசாயப் பொருள் ஒரு மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகிறதோ, அதை வாங்கும் விற்கும் வியாபாரம் ஒழுங்காக நடைபெறுவதற்கு வகை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குகிறது.

* இதற்கென அந்தந்த மாவட்டங்களில் விவசாயிகளுடையவும், வியாபாரிகளுடையவும் பிரதிநிதிகளைக் கொண்ட மார்க்கட் கமிட்டிகள் நிறுவி இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள நோக்கங்களை அமுல்படுத்தும் அதிகாரம் அவைகளிடம் ஒப்புவிக்கப்படுகிறது.

* கெஜட்டில் அறிவிக்கப்பட்ட பொருள்களில் வியாபாரம் செய்வோர், கமிஷன் ஏஜண்டுகள், புரோக்கர்கள், அளவுகாரர்கள் முதலியவர்களுக்கு லைசென்சு வழங்கி, அவர்கள் தங்கள் அலுவல்களை நேர்மையுடன் செய்கிறார்களா என்று கண்காணிக்க இந்த மார்க்கட்டு கமிட்டிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.

* கமிஷன் கட்டணமும், புரோக்கர்கள் வாங்கும் மத்தியஸ்த கட்டணமும், எடை கூலியும் கமிட்டியால் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குள்தான் வசூலிக்க ஏற்பாடு செய்கிறது.

மேலும் விற்கப்பட்ட விலையில் கழிக்கப்படும் மார்க்கட் செலவுகள் குறைந்து, விவசாயிகள் அதிகப் பணம் பெறும் நோக்கத்துடனும், பல ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிறுவி விவசாயிகளுக்குப் பல சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(1) ஒழுங்கு முறை விற்பனை நிலையங்களில் விவசாயிகள் தங்கள் பொருள்களை காயவைத்து தூசிகளை நீக்கி சுத்தம் செய்ய வசதிகள் இருக்கின்றன. (2) இதனால் பொருள்களின் தரம் உயர்ந்து அதிக விலைக்கு விற்கப் படுகின்றன. (3) விவசாயப் பொருள்களை பகிரங்க ஏலம் (Open Auction) அல்லது மறைமுக சீட்டு ஏலம் (Closed bid system) என்ற ஏதாவது ஒரு முறையில்தான் விற்கப்படுகிறது. (4) இம்முறையில் விவசாயிகள் கமிஷன் கட்டணமோ தரகோ கட்ட வேண்டியதில்லை. (5) வியாபாரிகளிடையே நேர்மையான போட்டி நிலவி, விவசாயிகள் தங்கள் பொருள்களுக்கு நல்ல நியாயமான விலையைப் பெறுகிறார்கள். (6) வியாபாரிகளுக்கும் தங்களுக்குத் தேவையான பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள வழியேற் படுகிறது. (7) இலவசமாக விவசாயிகள் தங்க சாவடி, மாடுகள் கட்ட தொழு, குடிப்பதற்குத் தண்ணீர் முதலிய வசதிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செய்து தரப்படுகின்றன. (8) நடப்பு விலை மந்தமாக இருக்கிறது என விவசாயிகள் கருதினால் ஒருநாள் தங்கி மறுநாள் பொருளை மார்க்கட் நிலவரம் அறிந்து விற்க ஏதுவாகிறது.

ஐம்பதே நாட்களில் 17,000 ராத்தல் தாளுரம்

ஆர். எச். கிருட்டிணன், உதவி பயிரியல் நிபுணர்.
அ. சுப்பிரமணியன், பயிரியல் உதவியாளர்.
(பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுரை.)

தஞ்சை மாவட்டத்தில் ஆனி முதல் வாரத்தில் காவிரியில் தண்ணீர் வருகிறது. ஆனால் தண்ணீர் வந்து 50-60 நாட்களுக்குப் பின்பே சம்பா வயல்கள் நடப்படுகின்றன. சம்பா பயிருக்கான தழையுரத்திற்கு, தண்ணீர் கிடைக்கக்கூடிய இந்த இடைக் காலத்தில் ஒரு பசுந்தாள் உரப் பயிர் விதைக்கலாம். இவ்வளவு குறுகிய காலமாகிய 50-60 நாட்களில் செழித்து வளர்ந்து ஏக்கருக்கு சுமார் 17,000 ராத்தல் தழை வரை கொடுக்கும். பசுந்தாள் செடி சணப்பு ஒன்றே.

ஆகவே தஞ்சை விவசாயிகள் சித்திரை மாதத்தில் கோடை மழை பெய்தவுடன் குறுவை நாற்றங் காலுக்கு வயல்களை உழும்பொழுதே சம்பா நடவு வயலையும் உழுது வைத்து ஆனியில் வாய்க்காலில் தண்ணீர் வந்தவுடன் சணப்பு விதை தெளித்து போதிய ஈரம் மட்டும் இருக்கும்படி கவனமாய் நீர் கட்டி குறைந்த நாட்களில் நிறைந்த பசுந்தாள் உரம் அடைந்து நிலத்திற்கிட்டு நிலவளத்தைப் பெருக்கி அதிக நெல் மகசூல் அடையுங்கள்.

தற்போது வடஆற்காடு, தென்ஆற்காடு, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஏழு ஜில்லாக்களில் மார்க்கட் கமிட்டிகள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. அந்தந்த மாவட்டங்களின் நிறுவப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பெயர்களும் அங்கே விற்பனை செய்து தரப்படும் விவசாயப் பண்டங்களின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாவட்டத்தின் பெயர்.	ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள்.	விற்பனை செய்து தரப் படும் விவசாயப் பண்டங்களின் பெயர்கள்.
(1)	(2)	(3)
வடஆற்காடு	வேலூர், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை, செய்யார், வந்தவாசி, அரக்கோணம், ஆரணி, குடியாத்தம், ஆற்காடு, திருப்பத்தூர்.	நிலக்கடலை
தென் ஆற்காடு.	திண்டிவனம், திருக்கோவிலூர், விழுப்புரம், உளுந்தூர்ப் பேட்டை, சின்னசேலம், பண்ருட்டி, கடலூர், விருத்தாசலம், வழவனூர், சிதம்பரம், கள்ளக் குறிச்சி.	நிலக்கடலை. பருத்தி, எள், நெல்.
தஞ்சாவூர்	சீர்காழி ..	நெல், நிலக் கடலை, தேங் காய், புகையிலை.
திருச்சிராப் பள்ளி.	கரூர், ஆலங்குடி, ஜெயங் கொண்டான், அரியலூர், மணப்பாரை, செந்துறை, ஆண்டி மடம்.	புகையிலை, நிலக் கடலை, மிளகாய், நெல், வற்றல், முந்திரி பருப்பு, எள், வெல்லம், நாட்டு வெல்லம்.
கோயம்புத் தூர்.	திருப்பூர், கோபிசெட்டிப் பாளையம், பொள்ளாச்சி, ஈரோடு, கோயம்புத்தூர், பெருந்துறை, பல்லடம், தாராபுரம்.	பருத்தி; நிலக் கடலை, புகையிலை.
ராமநாத புரம்.	விருதுநகர் —	பருத்தி, நிலக் கடலை.
திருநெல் வேலி.	கோயில்பட்டி —	மிளகாய் வற்றல், பருத்தி.

ஒழுங்குமுறை விற்பனை நிலையங்கள் முக்கியமாக விவசாய மக்களின் நன்மைக்காகவே நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. ஆகையால் அவர்கள் தாங்கள் விளைவிக்கும் விவசாயப் பொருள்களை தங்களுக்கு அருகாமையிலுள்ள ஒழுங்குமுறை விற்பனை நிலையத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து லாபமடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறைந்த செலவில் நிறைய உரம் பெற தழையுரம் பயிரிடுவீர்!

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMs

பஞ்சாயத்து செய்தி

மானமதுரை யூனியன்–மாங்குளம் பஞ்சாயத்தில் முந்திரி சாகுபடி.

துரைசாமி சேர்வை, தலைவர், மாங்குளம் பஞ்சாயத்து.

எங்கள் கிராம பஞ்சாயத்தான மாங்குளம் பஞ்சாயத்து கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மானமதுரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்ததாகும். பருவ மழை காலா காலத்திலும், போதிய அளவு தண்ணீர் வசதி கிடைக்காததாலும் விவசாயத்தினால் எங்கள் பொருளாதாரம் சீரடையவில்லை. எங்களுக்கு வருவாய் தரக்கூடிய வேறு தொழிலும் இல்லை. எவ்வித விவசாயமுமின்றி புன்செய் நிலமத்தனையும் வீணாகக் காய்ந்து கொண்டே கிடந்தது. இங்குள்ள புன்செய் நிலங்கள் சிறிது சரல் உள்ள செவல் நிலங்கள் ஆகும். இந்நிலங்களில் வறட்சியைத் தாங்கக்கூடிய ஏதாவது ஒரு பயிரையாவது மரத்தையாவது உண்டாக்கி பசுமை காட்ட வேண்டுமென்ற ஆர்வம் நீண்ட நாட்களாக எங்களுக்கு இருந்து கொண்டு வந்தது.

இச்சமயத்தில்தான் எங்கள் ஜில்லாவிற்கு கலெக்டராக வந்த ஸ்ரீமான் ஜே. எ. அம்பாசங்கர். ஐ.ஏ.எஸ்., அவர்கள் இப்பகுதிகளில் முந்திரி சாகுபடி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி சிவகெங்கை ஜில்லா விவசாய அலுவலரான ஸ்ரீமான் எம். என். மீனாட்சிசுந்தரம், பி.ஏ., பி.எஸ்ஸி., (அக்ரி) அவர்களுடன் கலந்தாலோசித்ததின் பேரில் இந்நிலங்கள் முந்திரி சாகுபடிக்கு ஏற்றது என்று அறிந்து முந்திரி சாகுபடியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தோம். தனி நபர்கள் முதன் முதலில் இப்புதிய விவசாயத்தைச் செய்ய சற்று தயங்கினர். ஆகவே பரீட்சார்த்தமாக பஞ்சாயத்தின் பராமரிப்பில் விடப்பட்டுள்ள தரிசு நிலம் சுமார் 50 ஏக்கரில் அக்டோபர் 62-ல் விவசாய அலுவலர்களின் உதவி கொண்டு முந்திரி சாகுபடி செய்யத் தீர்மானித்தோம். அதன்படி 2'×2'×2' அளவுள்ள குழிகள் 20 அடி இடைவெளியில் வெட்டப்பட்டன. சுமார் ஐந்து ஏக்கரில் இவ்வேலை முதலில் ஆரம்பமாகியது.

முந்திரி சாகுபடியில் அதிக கவனம் செலுத்திவரும் எங்கள் கலெக்டர் அவர்களால் ஆரம்பித்தது எங்களது அதிர்ஷ்டமே. எங்களைப் பின்பற்றி தெற்கு சந்தனூர், ஏனாதிக் கோட்டை பஞ்சாயத்துக்களும், இதர தனிப்பட்ட நபர்களுமாகச் சேர்ந்து சுமார் 500 ஏக்கரில் பயிரிட்டிருக்கிறார்கள்.

நாங்கள் முந்திரி சாகுபடி செய்திருக்கிற இடம் ஊருக்கும், ரஸ்தாவிற்கும் மிகவும் சமீபமானது. செடிகளும் நன்றாய் வளர்ந்து வருகின்றன. அதனால் முந்திரி சாகுபடியில் அசிரத்தையாக இருந்தவர்கள் கூட இப்போது இதை சாகுபடி செய்ய அதிக ஆசையோடு இருக்கின்றனர். தனி நபர்கள் முந்திரி சாகுபடியில் ஆர்வம் காட்டுவதற்காக அரசாங்கம் கடன் வசதி அளிக்கிறார்கள். 1963–64-ம் ஆண்டில் மேலும் சற்று அதிக அளவில் இச்சாகுபடியை இந்த யூனியனில் மேற்கொள்ள வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

முந்திரி சாகுபடிக்காக நாங்கள் செலவு செய்த தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரையே. ஆரம்பத்தில் சுமாரான மழையிருந்தது. பின்னால் இடையிடையே வாரம் ஓரிரண்டு முறை முதல் மூன்று மாதங்கள் வரை தண்ணீர் விடப்பட்டது. மூன்று மாதத்திற்குப் பின் தண்ணீர் விடவேண்டிய சிரமமுமில்லை. செடிகள் இப்போது 2' வரை வளர்ந்திருக்கின்றன. பல வருஷங்களாகப் பொட்டல் தரையாயிருந்த இந்நிலம் இப்போது பசுமை நிறைந்த முந்திரி செடிகளாய் காணப்படுவது எங்கள் சாதனை என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ளுகிறோம்.

இந்த முந்திரி செடிகள் பூத்துக் காய்க்க ஆரம்பித்ததும் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் அதைக் கொண்டு இன்னும் பல ஆக்க வேலைகளை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். இதே போல் வறண்ட பிரதேசங்களில் இருக்கும் என் போன்ற மற்ற பஞ்சாயத்துத் தலைவர்களும் தனிப்பட்டவர்களும் முந்திரி சாகுபடியை தைரியமாக மேற்கொண்டு அரசாங்கம் வகுத்துள்ள அபிவிருத்தித் திட்டங்களை நல்ல முறையில் அமுல் நடத்துமாறு கோருகிறேன்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் ஜூலை மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ.	ந.பை.
தென்னை நாற்றங்கால்—			
சேலம், சேலம் ஜில்லா.	10,000	0	65
விசுவாசபுரம், கன்யாகுமரி ஜில்லா.	8,000	0	65
குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.	25,000	0	65
கோயமுத்தூர், கோயமுத்தூர் ஜில்லா.	10,000	0	65
ஏறுபட்டி, கோயமுத்தூர் ஜில்லா.	10,000	0	65

விவசாயச் செய்திக் கதிர்

[எம். காசிவிஸ்வநாதன், டி. ரகோத்தம ராவ், விரிவினைப் பிரிவு, கோவை.]

தென் மேற்குப் பருவமழை துவங்கும் மாதம் ஜூன் மாதம். கோடையின் கடும் வெப்பம் ஓய, அனை வருக்கும் இதமளிக்கும் தென்மேற்குக் காற்று வீசத் துவங்குகிறது. பாசனத்திற்குதவும் ஆறு, ஏரி, குளங் களில் நீர் நிரம்புவதற்குதவும் தென்மேற்குப் பருவக் காற்று மழையை விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாயிருப்பார்கள். தங்கள் நிலத்தைத் தயார் செய்வதிலும், நாற்றங்கால் தயாரிப்பதிலும் விதைப்புக் கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் விவசாயிகள் முனைந் திருப்பர். குலைநோய் தாக்காத நெல் ரகங்களைத் தேர்ந் தெடுத்து, விதைக்கு முன் விதையை தக்க முறையில் மருந்திட்டு பக்குவம் செய்து விதைப்பது அவசியம்.

குலைநோய் தாக்காத நெல் ரகங்கள்.

கோ. 29, கோ. 30 என்ற இரு ரகங்கள் குலை நோயால் தாக்கப்படாத ரகங்களில் முக்கியமானவை.

கோ. 29 (குலைநோய் தாக்காத அறுபதாம் கோடை).

இந்த ரகம் கோ. 4 என்ற குலைநோய் தாக்காத நெல் ரகத்திற்கும், கோ. 13 அறுபதாம் கோடை ரகத்திற்கும் இடையே செயற்கை மகரந்தச் சேர்க்கை மூலம் கோவை நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்ட ரகம். இது 110 நாட்களில் முதிர்ச்சியடையும். குறுகிய காலப் பயிர். எக்கருக்கு 1350 கிலோ மகசூல் அளிக்கிறது. இந்த ரகத்தை மே-ஜூன் மாதங்களிலிருந்து செப்டம்பர் வரை கார் அல்லது சொர்னவாரி பருவத்திலும், ஜனவரி முதல் மே வரை நவரைப் பருவத்திலும் சாகுபடி செய்ய லாம். கோ. 13 ரகத்திற்குப் பதில் எல்லா இடங்களி களிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, திருச்சி, சேலம், கோவை, மதுரை மாவட்டங்களில் சாகுபடி செய்வதற்குகந்தது. உள்ளூர் ரகங்களை விட 13.1 சதவீதம் கூடுதலான மகசூல் கிடைக்கிறது. நெல் மணிகள் சொர சொரப்பாயும் வெண்மையான அரிசியை உடையதாயும் இருக்கின்றன. இந்த ரக நெல்லுக்கு உரங்களிடுவதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம்.

கோ. 30 (குலைநோய் தாக்காத ஒட்டுக் கிச்சலி).

இது கிச்சிலி சம்பா (ஜி.இ.பி. 24), கோ. 4 ஆகியவற்றி டையே செயற்கை மகரந்தச் சேர்க்கை மூலம் கண்டுபிடிக் கப்பட்ட ரகம். இதைச் சாகுபடி செய்வதற்குகந்த பருவம் ஜூலை-ஆகஸ்டு, டிசம்பர்-ஜனவரி. இது 165 நாட்களில் முதிர்ச்சியடையும் மத்திய காலப் பயிர். இது குறிப்பிட்ட பருவத்தில் தான் வளர்ந்து பலனளிக்கும் தன்மையுடையது. சராசரியாக எக்கருக்கு 1,500 கிலோ கிராம் மகசூல் அளிக்கிறது. 100 ராத்தல் நெல்லிலிருந்து 58·5 ராத்தல் அரிசி கிடைக்கிறது. நெல் மணிகள் கிச்சிலி சம்பாவைப் போன்றவை. அரிசி வெண்மை நிறமுடையது. உள்ளூர் ரகங்களை விட 15.1 சதவீதம் கூடுதலான மகசூல் கொடுக்கிறது. திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது.

நெற் பயிரில் வரிசை நடவு.

நாற்றுகளை குறிப்பிட்ட தூரத்தில் வரிசையாக நடுவதால் வளரும் செடிகளுக்கு மண்ணிலுள்ள பயிர்ச்சத்து சம மாகவும், சீராகவும் கிடைக்கிறது. களையெடுப்பு, உர மிடல், மருந்து தெளித்தல் ஆகிய அலுவல்களை எளிதில் செய்ய முடிகிறது.

சாதாரணமாக விவசாயிகள் வயலின் குறுக்கே நீள மான கயிற்றைக் கட்டி கயிற்றின் ஓரமாக தேவையான இடைவெளியில் நாற்றை நடுகிறார்கள். இவ்வாறு செய்வதில் ஒரு எக்கருக்கு கயிறுபிடிக்க இரண்டு ஆட்களும் நாற்றுநட பதினறு பெண்களும் தேவைப்படும். ஆனால் நடவுக்கு மூங்கிலினால் செய்யப்பட்ட முக்கோண வடிவ முள்ள நடவுச் சட்டத்தை உபயோகிப்பதன் மூலம் வரிசை நடவை எளிதிலும், சிக்கனமாகவும் செய்யலாம். இம் முறையில் நடவிற்கு ஒரு எக்கரில் கோடுகள் வரைய இரண்டு மணி நேரங்களுக்கு ஒரு ஆணும், நாற்று நட எட்டு பெண்களும் தேவைப்படுகிறது. மூங்கில் குச்சிகள் சம இடை வெளியில் பொறுத்தப்பட்டிருக்கின்றன. மூங்கிலினால் செய்யப்பட்ட இக்கருவியில் மூங்கில் குச்சிகளுக்கிடையே உள்ள தூரத்தை தேவைக்குத் தக்கபடி மாற்றியமைக்க லாம்.

வயலை நன்றாக உழுதபின் வயலில் அரை அங்குலம் தண்ணீர் வைத்து நடவுச் சட்டத்தை மெதுவாக இழுப்ப தால் மூங்கில் குச்சிகளினால் கோடுகள் தெளிவாக வரையப் படுகின்றன. இவ்வாறு நடவேண்டிய வயல் முழுவதும் கோடுகள் இழுத்தவுடன் நாற்று நடுதலைத் துவக்கலாம்.

சாதாரணமாக கயிறு பிடித்து நடும்போது நடுபவர் களில் ஒரு சிலர் சிறிது மெதுவாக நாற்று நட்டால், நடவை முடித்துவிட்ட மற்ற வேலையாட்கள் மற்றவர்கள் முடிக்கும்வரை காத்திருக்கவேண்டியிருக்கிறது. ஆனால், நடவுச் சட்டத்தை உபயோகிக்கும்போது இத்தகைய பிரச்னை எழுவதில்லை. வரையப்பட்ட கோடுகளின் மேல் அவரவர்கள் தங்கள் திறமையைப் பொறுத்து நட்டுக் கொண்டே போகலாம். ஒருவர் வேலையை முடிப்பதற்காக மற்றவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

ஆகவே, நடவு சட்டத்தை உபயோகிப்பதன் மூலம் நாற்று நடவை எளிதிலும், திறம்படவும், சிக்கனமாகவும் முடிக்கலாம்.

திராட்சையில் தெள்ளுப் பூச்சி.

கவாத்து செய்தபின் வளரும் இளங்குருத்துகள் திராட்சைத் தெள்ளுப் பூச்சிகளினுல் தாக்கப்படுகின்றன. நன்கு வளர்ந்த பூச்சிகள் வளரும் குருத்துகளைத் துளைத்து இளம் இலைகளைத் தின்று சேதம் விளைவிக்கின்றன. முதிர்ந்த இலைகளையும் இப் பூச்சி துளைக்கிறது. இப் பூச்சியின் புழுக்கள் வேரைத் தாக்குகின்றன. ஆனல், அதனல் அதிக சேதம் உண்டாவதில்லை. டி. டி. டீ. 50 சத நீரில் கரையும் தூள் ஒரு ராத்தலை 25 காலன் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம்.

திராட்சையைத் திரிப்ஸ் பூச்சிகளும் தாக்குகின்றன. இவை இலைகளிலிருந்து சாற்றை உறிஞ்சுகின்றன. தாக்குதல் தீவிரமாக இருந்தால் தாக்கப்பட்ட இடங்கள் முதலில் வெளிர்த்துப் பின் பழுப்பு நிறமடைகின்றன. தெள்ளுப் பூச்சிகளின்மேல் தெளிக்கப்படும். டி. டி. டீ. மருந்து இப் பூச்சியையும் கட்டுப்படுத்துகிறது. 0.015 சதவீதம் பாரதியான் மருந்தைத் தெளிப்பதன் மூலமும் இப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். ஆனல் மருந்தடித்தபின் குறைந்தது ஒரு மாதம் கழித்துதான் பழத்தை அறுவடை செய்யவேண்டும்.

நிலக்கடலைக்குப் பயிர் பாதுகாப்பு.

பணப் பயிர்களில் முக்கியமான பயிரான நிலக்கடலையை பல பூச்சிகளும் நோய்களும் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. இவற்றுள் சிவப்புக் கம்பளிப்புழு, சுருள் பூச்சி ஆகிய பூச்சிகளும் 'டிக்கா' இலைப்புள்ளி நோயும் முக்கியமானவை. இவற்றுல் ஏற்படும் சேதத்தைக் குறைக்க பின்வரும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்:-

1. விதைகளை விதைப்புக்குமுன் அக்ரசான் மருந்துடன் கலந்து விதைத்தல்.

2. பயிரில் அந்துப் பூச்சிகள் காணப்பட்டவுடன் எண்டிரின் மருந்து தெளித்தல். பூச்சிகள் கண்ட ஒரு வாரத்திற்குள் மருந்து தெளித்தலை முடிக்கவேண்டும்.

3. டி.டி.டீ. 5 சதவீத தூளை ஏக்கருக்கு 25 ராத்தல் வீதம், விதைத்த 30, 60, 90-வது நாட்களில் தூவுதல்.

4. விதைத்து 50-வது, 80-வது நாட்களில் ஏக்கருக்கு 15 ராத்தல் வீதம் கந்தகத் தூள் தூவுதல் அல்லது 3/4 சதவீதம் போர்டோக் கலவை தெளித்தல்.

5. இறைவைப் பயிரில் விதைத்த 30 நாளில் பாலிடால் மருந்தும், 60-வது, 90-வது நாட்களில் பாலிடால் மருந்தை தாமிரப் பூசண மருந்துகளுடன் கலந்தும் (100 க, செ. மீ. பாலிடாலும், 3/4 ராத்தல் தாமிரப் பூசண மருந்துகளையும் 40 காலன் தண்ணீரில் கலந்து) தெளித்தல்.

தமிழ்நாட்டில் வாசனைத் திரவியங்கள்.

அந்நியச் செலாவணியை அளிக்க உதவும் ஏற்றுமதிப் பொருள்களுள் வாசனைத் திரவியங்கள் முக்கியமானதாகும். பெரும்பான்மையான வாசனை திரவியப் பயிர்களை பயிர் செய்ய தமிழ்நாடு மிகவும் ஏற்ற சூழ்நிலையைக் கொண்டுள்ளது.

* மிளகு, ஏலக்காய், இலவங்கம் (கிராம்பு), ஜாதிக்காய், இலவங்கப் பட்டை, வனில்லா போன்ற அனேகமாக எல்லா வாசனைத் திரவியங்களும் தமிழ்நாட்டில் பயிரிடப்படுகின்றன.

* மொத்தப் பரப்பில் பெருமளவில் ஏலம் 15,155 ஏக்கர்களிலும், ஜாதிக்காய் 500 ஏக்கர்களிலும் இலவங்கம் 500 ஏக்கரிலும் பயிரிடப்படுகிறது. ஏனைய வாசனை திரவியப் பயிர்கள் மிகச் சொற்ப அளவேயாகும்.

* தமிழ்நாட்டில் நீலகிரி, மதுரை, திருநெல்வேலி, கோவை, கன்னியாகுமரி, சேலம் மாவட்டங்களிலுள்ள ஈரமும், ஈரப்பசை மிகுந்த மலைச்சாரல்களிலேயே வாசனைத் திரவியப் பயிர்கள் பெரும்பான்மையாகப் பயிரிடப்படுகிறது. இன்னும் பெருவாரியாகப் பயிரிட நிறைய வாய்ப்புமிருக்கிறது.

* ஏலக்காயில் எஸ். 71, எஸ். 81 ரகங்கள் மிகச் சிறந்தவை. உள்நாட்டு ரகங்களை விட இரண்டு முதல் ஐந்து மடங்கு அதிகம் விளைச்சல் தரக்கூடியது.

* இலவங்க நாற்றுக்களையே ஆதாரச் செடியாக உபயோகித்து, செடி அணைத்தல் முறையில் ஒட்டுக்கட்டி வெற்றிகரமாக இலவங்கப் பயிரை இனவிருத்தி செய்யமுடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒட்டுக் கட்டுதல் மூலம் இலவங்கத்தின் நீண்ட காலம் தாமதித்துக் காய்க்கும் தன்மையை வெகுவாகக் குறைத்து, தனிமரத்தின் காய்ப்புத் தன்மையை அதிகரிக்கலாம்.

* ஜாதிக்காயில் "செடி அணைத்தல்" முறையில் வெற்றிகரமாக ஒட்டு கட்டி, அதனல் பலன் கொடுக்காத ஆண் மரங்களை தவிர்க்க முடிகிறது. ஜாதிக்காய் இனத்தைச் சேர்ந்த ஏழு இனங்களுடன் ஒட்டு கட்டலாம். இவ்வொட்டுச் செடிகள் விரைவில் காய்ப்புக்கு வரும். மரங்களும் குட்டையாக இருப்பதால் காய் அறுவடைக்கும் சுலபமாக இருக்கிறது.

* கல்லார், பர்லியார், அரசாங்கப் பழ ஆய்வுக்கூடத்தில் இலவங்கம், ஜாதிக்காய் ஒட்டுச் செடிகள் ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேவையுள்ளவர்கள் மேற்படி பண்ணைக்கு விண்ணப்பித்தோ அல்லது தோட்டக்கலை நிபுணர், வேளாண்மைக் கல்லூரி, ஆய்வுக்கூடம், கோவை-3 என்ற விலாசத்திற்கு எழுதியோ பெற்றுக் கொள்ளலாம்.

*** தமிழ்நாட்டில் மலைப்பிரதேசங்களிலுள்ள விவசாயிகளே! தோட்டச் சொந்தக்காரர்களே!! அந்நியச் செலாவணியைப் பெற உதவும் வாசனைத் திரவியப் பயிர்களை நிறைய பயிர் செய்யுங்கள். நாட்டின் வாசனைத் திரவிய வாணிபத்தை பெருக்க உதவுங்கள்.**

குறிப்பு—தோட்டக்கலை ஆராய்ச்சி நிபுணர், வேளாண்மைக் கல்லூரியும் ஆய்வுக் கூடமும், கோவை, எழுதிய "தமிழ்நாட்டில் வாசனைத் திரவியங்கள்" என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள்.

1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதக் காலநிலை அறிக்கை

[சி. பாலசுப்ரமணியன், ம. வி. ஜயராமன், சீ. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்.]

இம்மாதம் முதல் பத்து நாட்களில் வறட்சி நிலவியது. ஆனால் 5-ம் தேதி மட்டும் இம்மாநிலத்தில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 11-ம் தேதியன்று சிற்சில இடங்களிலும் தொடர்ந்த இரு நாட்களில் ஆங்காங்கும் மழை பெய்தது. அதன் பின்னர் பத்து நாட்கள் சிற்சில இடங்களில் இடியுடன் மழை பெய்தது. ஆனால் 17-ம் தேதியன்று வறட்சி நிலவியது. பின்னர் 24, 25 தேதிகளில் ஆங்காங்கு மழை பெய்தது. பிறகு இம்மாதம் முடிய சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 28-ம் தேதியன்று வறட்சி நிலவியது. இம்மாதத்தில் உச்ச வெப்ப நிலை பதிமூன்று நாட்களில் சராசரிக்கும் தாழ்ந்திருந்தது.

கால நிலையும், பயிர் வளர்ச்சியும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் மழை மிகக் குறைவு. பொதுவாக நிலவிய வறண்ட நிலை நவரை நெல் அறுவடைக்கு உகந்ததாயிருந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில் இம்மாதம் சிறிதளவு மழை இருந்தது; வெப்பம் மிகுதியாக இருந்தது. கரும்பில் குருத்துப் பூச்சி மிதமாகக் கண்டது. மழையின்மையால் கிணறுகளும் குளங்களும் வறண்டன. ஆனால் செய்யாறு, வந்தவாசி பகுதிகளில் ஆலங்கட்டி மழையினால் சுமார் 200 ஏக்கரில் நெல் சேதமாயிற்று. ஆனால் சுமார் 15 கிராமங்களுக்குத் தண்ணீர் வசதிகிட்டியது. இம் மாவட்டத்தில் நெற் பயிரை தத்துப் பூச்சியும் குருத்துப் பூச்சியும் புள்ளி வண்டும் நிலக் கடலையை அசுவும் சிறிதளவு தாக்கின. தென்னாற்காடு மாவட்டத்தில் இம் மாத கடைசியில் பெய்த மழை நிலக்கடலை, எள், பருத்தி, கரும்பு, மரவள்ளிக் கிழங்கு முதலிய பயிர்களுக்கு ஏற்றதாகவிருந்தது. திண்டிவனம் பகுதியில் கோடை நிலக்கடலையில் சுருள் பூச்சியும், அசுவும், ஆமணக்கில் கொக்கிப் புழுவும் வெகுவாகக் காணப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் இம்மாதம் பெய்த மழை நிலக்கடலை, பருத்தி, காய்கறிப் பயிர்கள், பசுந்தாளுர பயிர்கள் ஆகியவைகளுக்கு உதவியது. பட்டுக்கோட்டைப் பகுதியில் நிலக்கடலையில் இலைப்புள்ளி நோயும், அசுவும் சிறிதளவு காணப்பட்டன.

மதுரை மாவட்டத்தில் பெய்த மழை சோளம், பருத்தி மற்றும் காய்கறிப் பயிர்களுக்கும் உகந்ததாயிருந்தது. கரும்புப் பயிருக்கும், பருத்திக்கும் மண் அணைக்கும் வேலை நடைபெற்றது. உசிலம்பட்டி பகுதிகளில் பருத்தியில் காய்ப் புழுக்களும், சோளத்தில் செஞ்சிலந்தியும் (Mite) காணப்பட்டன.

இராமனாதபுரம் மாவட்டத்தில் மழையால் மானாவாரி பருத்தியும், கோடைப் பருத்தியும் பயனடைந்தன. திருநெல்வேலி மாவட்டத்தில் சற்று அதிகமாக மழை பெய்தது. மானாவாரி பருத்தியில் தண்டுப் பூச்சியும் அசுவும் பெருமளவில் காணப்பட்டன. இம்மழை கரும்பு, மிளகாய், பருத்தி, காய்கறிப் பயிர்கள், எள் மற்றும் ராகி, பசுந்தாளுரம் ஆகியப் பயிர்களுக்கு ஏற்றதாக இருந்தது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும் உளுந்து, பயிறு, காய்கறிப் பயிர்கள், சணப்பு, வாழை முதலியவைகளுக்கு ஏற்றதாக இருந்தது. நீலகிரி மாவட்டத்தில் சற்று அதிகமாக மழையிருந்தது. இம் மழை உருளைக்கிழங்கு, காய்கறிகள், தோட்டங்கள் முதலியவற்றிற்கு உதவிற்று. கூடலூர் பகுதிகளில் நெல் இரண்டாம் போகம் விதைப்புக்கும் உருளைக்கிழங்கு முதல் பயிருக்கும் இம் மழை உதவியாயிருந்தது. ஆனால் தாமதமாக பெய்த காரணத்தால் உருளைக்கிழங்கு முளைக்க நாளாயிற்று.

கோவை மாவட்டத்தில் சுமாராக மழை இருந்தது. நெல், ராகி, சோளம், பருத்தி, நிலக்கடலை மற்றும் கரும்புப் பயிர்கள் இம் மழையால் பயனடைந்தன. கோடைப் பருத்தி விதைப்புக்கு இம் மழை உதவிற்று.

சேலம் மாவட்டத்தில் சங்கரி தாலுகாவில் மட்டும் மழையிருந்தது. இம்மழை நெல், பருத்தி, எள் மற்றும் மரவள்ளிக்கிழங்குப் பயிர்களுக்கு உதவிற்று. இப்பகுதியில் பருத்தியில் சிவப்புப் பூச்சிகளும் காய் புழுக்களும் காணப்பட்டன.

குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
(1)	(2)	(3)	(4)
1	12—4—1963	கொடைக்கானல்	2·72
2	ஷை	பாம்பன்	2·68
3	14—4—1963	கோயில்பட்டி	2·24
4	24—4—1963	கூனூர்	1·97
5	ஷை	நுங்கம்பாக்கம்	1·97

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர்.	ஏப்ரல் மாத மழை யளவு.	சராசரி யிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்	0·8	—0·1	குறைவு
கீழ்க்கரை பிராந்தியம்	1·1	—0·2	ஷை
மத்திய பிராந்தியம்	1·3	—0·6	ஷை
தென் பிராந்தியம்	2·9	+0·3	அதிகம்
மேலைப் பிராந்தியம்	4·7	+0·2	ஷை

1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதக் காலநிலை அறிக்கை
மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மொத்த மழையளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	2·6	+2·0	8.8
திருர்குப்பம் *	0·1	—0·7	3·6
வேலூர்	0·6	—0·4	3·1
குடியாத்தம் *	இல்லை	—1·1	1·5
கிழக்கரை பிராந்தியம்			
பாலூர் *	1·1	+0·5	9·0
திண்டிவனம் * ..	2·1	+1·2	6·3
கடலூர்	0·1	—0·9	8·5
நாகப்பட்டினம் ..	0·5	—0·6	10.0
ஆடுதுறை *	1·2	—0·2	10·1
பட்டுக்கோட்டை * ..	1·3	—0·9	10·2
மத்திய பிராந்தியம்			
சேலம்	0·9	—1·0	2·4
கோயம்புத்தூர் * ..	1·2	—0·4	2·5
கோயம்புத்தூர் ..	1·4	—0·2	2·6
திருச்சிராப்பள்ளி ..	1·5	—0·9	8·5
தென் பிராந்தியம்			
மதுரை	1·0	—1·2	5·9
பாம்பன்	3·7	+1·8	12·7
கோவில்பட்டி *	5·9	+2·6	9·5
பாளையங்கோட்டை	3·5	+1·1	19·5
அம்பாசமுத்திரம் * ..	2·9	—0·5	23·7
நாகர்கோவில் * ..	2·2	— .7	4·9
கன்னியாகுமரி * ..	1·0	—1·3	5·8
மலை பிராந்தியம்			
கொடைக்கானல் ..	5·0	+0·1	17·1
கூனூர் *	4·1	—1·8	19·8
உதகமண்டலம் * ..	4·1	+0·7	7·9
நஞ்சநாடு *	5·5	+1·9	8·2

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

ஆடி—ஆவணி மாத விவசாயக் குறிப்புகள்.

நெல்

நடவு.—நாற்றுகளை வரிசையில் நடவும். 10 அங்குலத்திற்கு ஒரு வரிசை அமைக்கவும். குழிக்கு 2, 3 நாற்றுகள் வீதம் நீண்ட காலப் பயிரானால் வரிசையில் 6″ இடைவெளியிலும், மத்திய காலப் பயிரானால் 5″—6″ இடைவெளியிலும் குறுகிய காலப் பயிரானால் 3″-4″ இடைவெளியிலும் நடவும்.

பருத்தி

புரட்டாசிப் பட்டப் பருத்தி.—எக்கருக்கு 10 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்டு இட்டு பண்படுத்திய நிலத்தில் 2½ அடிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும்.

நிலக்கடலை

மானவாரி.—பொள்ளாச்சி தாலுகா பகுதிகளில் கடலை அறுவடை எச். எம். குண்டகா 2 கருவியை உபயோகித்து கொடி ரகக் கடலையை சிக்கனமாகவும் சுலபமாகவும் அறுவடை செய்யலாம்.

தென்னை

மழைக்குப் பின் ஒரு மரத்திற்கு 20 ராத்தல் சாம்பலும், 50—100 ராத்தல் கம்போஸ்ட் அல்லது தொழு உரமும் போடவும். சணப்பு, குரோட்டலேரியா, கலபகோனியம், பில்லிபசரா போன்ற பசுந்தாள் உரச்செடிகளை ஊடுபயிராக விதைக்கவும். தோப்பு ஓரங்களில் விரைவில் வரும் கிளிரிசிடியாவையும் தழைக்காக நடலாம்.

பழம் காய்கறி வகைகள்

ஆவணி மாதக் குறிப்பு.—பழச் செடிகள் நடவு, பழத் தோட்டங்களில் ஊடு பயிர் விதைப்பு, காய்கறி விதைப்பு.

விவசாயச் செய்தி

ஆகாய விமானம் மூலம் மருந்தடிக்கச் சலுகை.

நடப்பு ஆண்டில் (1963–64) நிலக்கடலைக்கும், பருத்திக்கும் ஆகாய விமானம் மூலம் மருந்தடிக்க மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மாகாண அரசாங்கம், விமானம் மூலம் மருந்தடிக்கும் பொழுது, உபயோகிக்கப்படும் விமானம் மத்திய அரசாங்க விமானமாயிருந்தால் ஏக்கருக்கு ரூ. 1 விமான வாடகையாக வசூலிக்கவும், தனியார் விமானமாயிருந்தால் அதற்குண்டான வாடகையில் மூன்றில் இரண்டு பங்கு மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகவும் மத்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

விமானத் தளங்களை அமைக்கவும் மற்றும் சம்பந்தப்பட்ட வேலைகளையும் மாகாண அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

புகையிலே உற்பத்தியாளர்கள் பாராட்டுகின்றனர்—

மேடைப் பாத்தி நாற்றங்காலின் மேன்மைகள்

I. அன்னூர் வட்டாரம்

1. ....சாதாரண முறையில் நாற்று விடுவதைக் காட்டிலும் விரைவில் குறைந்த கால அளவில் நாற்றுக்கள் வளர்ச்சி அடைகின்றன....சாதாரண பாத்திகளில் தண்ணீர் தேங்கி நிற்க வசதி இருப்பதால் நாற்றுக்கள் பழுதடைய ஏதுவாகின்றது. மேடைப் பாத்திகள் மூலம் நாற்றுக்கள் அதிகமாகப் பழுதடைவதில்லே. பல வழிகளிலும் நன்மையே தருகின்றது....

கனுவக்கரை. (ஒ–ம்) K. M. முத்துசாமி,
பஞ்சாயத்துத் தலேவர்.

2. ......பழைய முறையைக் காட்டிலும், மேடைப் பாத்தியே நாற்று விடுவதற்குச் சிறந்தது. மழை காலங்களில் தண்ணீர் தேங்கி பலவித நோய்கள் தாக்காமல் நாற்று நடவு செய்யக் கிடைக்கின்றது...... மேடைப் பாத்தியே அநுபவ முறைப்படிச் சிறந்தது.

ஆம்போதி. (ஒ–ம்) A. A. பழனிச்சாமி.

II. காரமடை வட்டாரம்

3. விவசாய டிபார்ட்மெண்டின் ஆலோசனையின் பேரில் 9½ அடி நீளமும், 5½ அடி அகலமும் உள்ள ஒரு செண்ட் நிலத்தில் சுமார் எட்டு பாத்திகள் வீதம் 44 பாத்திகள் அமைத்தேன். பாத்திகளேச் சமனப்படுத்திய பிறகு நன்ருகப் பொடி செய்து சலிக்கப்பட்ட சாணி உரத்தை சுமார் முக்கால் அங்குல கனத்திற்கு பாத்தியின் மேல் சமமாகப் பரப்பி கையினுல் அமுக்கிவிட்ட பிறகு, ஒரு பாத்திக்கு 13 குண்டுமணி எடை விதையை மணலுடன் கலந்து சமமாக விழும்படி தூவிவிட்டேன். நான்கு வாரங்கள் வரை பூவாளியால் தண்ணீர் தெளித்து வந்தேன். ஒரு நாளேக்கு நான்கு, ஐந்து தடவை தண்ணீர் தெளிக்க வேண்டியிருந்தது. மேற் சொல்லிய படி செய்ததால் நாற்றுக்கள் நன்ருக வளர்ந்தன. இவ்வாறு தயார் செய்தவகையில் எனது பூமியிலும், பல விவசாயிகளுக்கு பல கிராமங்களில் தங்கள் இலாகா வித்துக்களிலிருந்து சுமார் 30,000 நடவு செய்யப்பட்டுள்ளது........................

மொள்ளேபாளேயம். (ஒ–ம்) M. R. கரிவரதன், பி.ஏ.

III. பவானி சாகர் வட்டாரம்

4. 1962–63-ம் ஆண்டில் புகையிலே அபிவிருத்தித் திட்டத்தின்கிழ் எனது நிலத்தில் வாழைக்கப்பல் I. 118, 60 கிராம் விதை வாங்கி 15 மேடைப் பாத்திகளில் நாற்று விட்டேன். 15 சாதாப் பாத்திகளிலும் விடப்பட்டன. சாதாரணப் பாத்திகளில் ஐந்து அடி முதல் ஏழு அடி வரை தண்ணீர் அரிக்கப்பட்டு நாற்றுநிற்கவில்லே. தண்ணீர் அதிகமாகத் தேங்கி நின்றமையால் கொஞ்சம் அழுகல் நோய் கண்டது. விதையின் அளவு சுமார் 80 கிராம். நாற்றுக்கள் 50,000 வரை கிடைத்தன. ஆனுல் 60 கிராம் பொறுக்கு விதை 15 மேடைப் பாத்திகளில் விடப்பட்டதில், பாத்திகளில் அரிப்பு இல்லாமலிருந்ததால், நாற்று அதிகமாக இருந்தது.......மேடைப் பாத்திகளில் நாற்றுக்கள் எடுக்க எடுக்க கடைசி வரை இருந்து கொண்டே இருந்தது. 80,000 நாற்றுக்களுக்கு மேல் எடுத்துங்கூட, அதற்குப் பின்னும் நாற்றுங்காலில் நாற்றுக்களிருந்தன. சாதாரண முறையில் விடப்பட்ட நாற்று, இரண்டு மூன்று தரம் நாற்று எடுத்த பின், தண்ணீர் அரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனுல் மேடைப் பாத்தி அம்மாதிரியில்லே. ஒரு லட்சத்திற்கு மேல் விவசாயிகளுக்குக் கொடுத்தேன்.

வெள்ளியம்பாளேயம். (ஒ–ம்) V. கண்ணன்.

IV. தூக்க நாயக்கன் பாளேயம் வட்டாரம்

5. ....புகையிலே விதையை மேடைப் பாத்தியின்மூலம் நாற்று விட்டதில், தண்ணீர் தேங்கி அழுகல் சம்பந்தமான பல நோய்கள் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது. இதுவே சிறந்த முறை......

கொண்டையம்பாளேயம். (ஒ-ம்) K. S. ராமதுரை.

6. நான் பல வருடங்களாக சாதாரண முறைப் பாத்தியிட்டு வந்திருக்கிறேன். புகையிலே அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விதை கிடைத்தது. மேடைப் பாத்தி நாற்று விடப்பட்டதில் ஒரே ராசியாகவும், மழை பெய்யும் நடவிற்கு நாற்று கிடைத்தது. ஆதலால் முன்னதைவிட மேடைப் பாத்தியே சிறந்த முறை............

T.N. பாளேயம். (ஒ–ம்) R. அட்டியண்ணன்.

V. நம்பியூர் வட்டாரம்

7. ....சாதாரண நீளப்பாத்திகளில் நாற்றுக்கள வளருவதைவிட ஆரோக்கியமாகவும் சீக்கிரமாகவும் நாற்று வருகிறது........சாதாரணப் பாத்தி நாற்று மாதிரி நட்ட நாற்றுக்கள் சாவதுபோல் மேடைப் பாத்தி நாற்றுக்கள் சாவதில்லே. நன்ருக உயிர் பிடிக்கிறது. விவசாயிகளுக்கு நல்லதொரு மேடைப் பாத்தி........ எத்தனே மழை பெய்தாலும், தண்ணீர் நாற்றுங்காலில் தேங்குவதில்லே. எனவே, நாற்றுக் கெடுவதில்லே. நல்லதொரு முறை. நாட்டுக்கேற்ற முறை. விவசாயிகளுக்கு வீண் விரயதைத் தடுக்கும் முறை........

நல்லூர். (ஒ–ம்) N. P. முருகையன்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963

காய்த்துக்குலுங்கும் "பங்களூரா"



திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மானூர் பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தில் எடுக்கப்பட்ட படம்.

அரசாங்கம் அளிக்கும் கடன் உதவியையும். சலுகைகளையும் பயன்படுத்தி பழச் செடிகள் நிறைய பயிரிட்டு, தங்கள் வருவாயையும் பெருக்கி, மக்கள் சத்துள்ள உணவு பெற உதவுங்கள்.

அட்டைப் பட விளக்கம்

மணல் கலந்த வடிகால் பூமிகளில் பயிரிட ஏற்ற பசுந்தாள் உரம் சணப்பு—45 நாட்களில் சராசரி 15,000 ராத்தல் தழை கொடுக்கும். ஏக்கருக்கு தேவையான விதை 30 முதல் 40 ராத்தல். இருபோக நஞ்சை நிலங்களுக்கு உகந்த குறுகிய காலப் பசுந்தாள் உரப் பயிர்.

படத்தில் காட்சியளிக்கும் தழைத்து நிற்கும் "சணப்பு" திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மானூர் பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்தில் பயிர் செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.